





# ...ங்காமுடி

...னம், பாடல்கள்.

# வணங்காமுடி



முழு வசனம் - பாடல்கள்

50
நயே பைசே

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| சிவாஜி கணேசன் | ... | சிற்பி சித்ரசேனன் |
| எம். கே. ராதா | ... | அரசன் |
| வி. நாகையா | ... | சேவப்பன் |
| எம். என். நம்பியார் | ... | நரேந்திரன் |
| கே. ஏ. தங்கவேலு | ... | பரஞ்ஜோதி |

எம். ஆர். சந்தானம், நாட் அண்ணாஜிராவ்,
தங்கப்பன், ஜெமினி பாலு, மற்றும் பலர்.



## நடிகைகள்

| | | |
|---|---|---|
| சாவித்திரி | ... | தேவசுந்தரி |
| கண்ணாம்பா | ... | மங்களம் |
| ராஜசுலோச்சனா | ... | அம்பிகா |
| எம். சரோஜா | .... | நீலவேணி |

நடனம்: ஹெலன்

**பின்னணி பாடியவர்கள்:**

எம். எல். வசந்தகுமாரி, பி. சுசீலா, பி. லீலா, ஜிக்கி,
டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன்,
ஏ. எம். ராஜா, டி. வி. ரத்னம், எஸ். சி. கிருஷ்ணன்.

கதை வசனம்: **ஏ. கே. வேலன்**

பாடல்கள்: **தஞ்சை ராமையாதாஸ்**

சங்கீதம்: **ஜி. ராமநாதன்**

டைரக்ஷன்: **பி. புல்லையா, பி. ஏ.**

ஸ்டுடியோ: **நெப்டியூன், அடையார்.**

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை - 1.

# வணங்கா முடி

## முழு வசனம்—பாடல்கள்

—●—

### காட்சி 1

(தேவசுந்தரி, அழகின் அவதாரம், அன்பின் உறைவிடம், சிங்கார பதுமை. சிறப்புக் கூடம். செங்கோலேந்தியின் மகள். பொங்கிப் புரண்டோடும் புது வெள்ளத்திலே தன் தோழி நீலவேணியுடன் படகிலேறி பாடிய படியே பவனிவருகிருள். சோலை வனங்கள் சோபிதம் கூற சுந்தரிகள் படகை செலுத்துகின்றனர்.)

(பாட்டு)

(இன்பத்தில் இரண்டறக் கலந்து வீசும் தென்றல் எங்கிருந்தோ இனிமையான இசையையும் இழுத்து வருகிறது. இசை இளவரசியின் இதயத்தை கவர்வதுடன் இழுத்தும் செல்கிறது. இனிமை கேட்ட மன்னர் மகள் புன்னகையை சிந்திய படியே மதுவுண்ட வண்டு போல் மயங்கி, மங்கைகளுடன் செல்லுகிருள் பச்சை மலைச் சாரலுக்கு. பச்சை மலையிலே, செவ்வான அழகை தோற்கடிக்கும் செந்தூர பொட்டிட்ட கட்டழகன், சித்திரசேனன் கல் உளியுடன், கற்பனையை இதயத்தில் தேக்கி, கற்களில் கைவரிசையைக் காட்டி சிற்பகூடமாக மாற்றியபடியே பாடிக் கொண்டிருக்கிருன்.

(பாட்டு)

[அழகு ரம்பையர்கள், ஆடல் காட்டும் அற்புத சுந்தரிகள், அரண்மனை அழகிகள் பச்சை மலை தடத்திலே பாதம்பட சிற்பங்களை பார்க்க வருகின்றனர்]

### காட்சி 2

[சித்ரசேனன் தன் உயிர்த் தோழன் பரஞ்சோதியிடம்]

சித்: அட பரஞ்சோதி, இத்தனை நேரமும் எங்கேயடா போயிருந்தாய்?

பரஞ்: உன்னைய விட்டுட்டு நான் எங்கேயடா போவேன்? உன் சங்கீதத்துக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லேன்னு கொஞ்சம் அப்பால இருந்தேன். ஏண்டா சித்ரசேனு...இங்க இருக்கிற கல்லுகளை எல்லாம் பொம்மையாச் செய்து ஏண்டா என்னை பயமுறுத்துற? ஏண்டா இங்க இருக்கிற கல்லுகளை ஒரு அம்மி, குளவி, உரலு,

உலக்கை, இயந்தரம், துணி துவைக்கிற கல்லு இப்படி ஏதாவது செய்தாலும் நாலு காசு கிடைக்கும்.

சித்: அட பரஞ்சோதி. இங்கே இருக்கும் கல்லுகளை சிற்பமாக்கி காசுக்கு விற்று உயிர்வளர்க்கும் கூலி யல்லடா நான். காலத்தாலும் செய்ய முடியாததை நான் செய்து உருவமாக்குகிறேன். என் கற்பனை கனவுகளை நினைவாக்குகிறேன். அந்த ஆத்ம திருப்தி ஒன்றே எனக்குப் போதுமடா...

## காட்சி 3

[சிற்பங்களின் சிறப்புகளைக் கண்ட சிங்காரி, ஒய்யாரி, தேவசுந்தரி தன் தோழியிடம்]

தேவ: நீலவேணி!

நீல: இளவரசி.

தேவ: எவ்வளவு அழகான சிற்பங்கள்.

நீல: ஆமாம்மா...ஆகா...

தேவ: ஒவ்வொரு சிலைகளிலும் ஜீவன் ததும்புகிறது. பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது.

நீல: ஆமாம்மா பார்க்க பார்க்க ஆனந்தமாய் இருக்கு. அம்மா அம்மா...பாம்பு...பாம்பு... (கல்லால் அடித்து, பின் தொட்டுப் பார்த்து) அடபாம்பு இல்லம்மா. அதும் சிலைதான். அம்மா! இதை எல்லாம் செய்தவர் உண்மையிலேயே பெரிய சிற்பிதான்.

தேவ: சந்தேகமே யில்லை, உயிரில்லாத பாறைகளுக்கு உயிரூட்டியவர் உண்மையிலேயே பெரிய சிற்பிதான். அவருக்கு இந்த உலகத்தையே பரிசாகக் கொடுக்கலாம்.

நீல: ஆமாம்மா. ஆனா இந்த உலகத்திலே நீங்களும் இருக்கீங்க...

[நாணம் தேவசுந்தரியிடம் நர்த்தன மாடுகிறது.]

## காட்சி 4

[கன்னிப் பெண்ணின் சிலையை கட்டழகன் சித்ரசேனன் நிர்மாணித்துக் கொண்டிருக்க, கை உளி கலகலவென சப்த ஜாலம் செய்து கொண்டிருக்க, கால்சதங்கை ஒலிகேட்ட பரஞ்சோதி தலை நிமிர்ந்து, தையலார்கள் வருகை கண்டு தன் தோழனிடம்]

பரஞ்: டேய் சித்ரசேனா...டேய்...டேய்... பெண் ஜென்மங்கள். வருதுடா பெண்ஜென்மங்கள் டேய்...டேய்...

சித்: (ஏளனமாக) பெண் ஜென்மங்களா, அவர்கள் உன்னைத் தான் தேடிக் கொண்டு வருவார்கள். வரவேற்பு கொடு போ.

பாஞ்: டேய் சித்திரசேனு. அழகான சிலைகளை செதுக்கத் தான் உனக்கு தெரிந்திருக்கே தவிர அதை அனுபவிக்கத் தெரியலயே?

சித்ர: நீயே போயி அனுபவி போ!

[சிருங்கார சிற்றிடையாள், தோகை மயிலாள், குயிலாள், குன்ருத குலவிளக்காள், வட்டமதி முகம்படைத்தாள், பொன் மேனியாள், வைர புன்னகையாள், சிற்பத்தின் எழிலிலே இதயத்தைப் பறி கொடுத்துவர பரஞ்சோதி வரவேற்று]

பரஞ்: வாங்க...வாங்க...உங்க பாதம் படுறதுக்கு இந்த காடுமலையும் என்ன புண்ணியம் செய்ததோ ஆமா! நீங்கயாரு?

நீல: நாங்க பொண்ணுங்க.

பரஞ்: பொண்ணுங்களா? இங்க ஏன் வந்தீங்க? எதுக்கு வந்தீங்க?

தேவ: ஐயா. இங்கே இனிமையான சங்கீதம் கேட்டது.

பரஞ்: என்ன? சங்கீதமா? எங்க கேட்டுதுங்க?

தேவ: இங்கே இனிமையான சங்கீதம் கேட்கவந்தோம். ஆனுல் அழகான சிற்பங்களைப் பார்த்தோம். காதுக்கு கிடைக்க வேண்டியது கண்ணுக்கு கிடைத்தது...

பரஞ்: ஏது ஏது...சங்கீதம் கேட்க வந்தீங்க. சிலைகளைப் பார்த்தீங்க. அப்புறம் வந்து...

நீல: யேய் யார்கிட்ட பேசுறேங்கிறது தெரியுமா?

தேவ: நீலவேணி.

பரஞ்: அது நீ சொல்லி தெரியணுமா? அதுதான் சொல்லிட்டயே பொண்ணுகன்னு.

தேவ: ஐயா. நாங்க இங்க வந்தது உங்களுக்கு இடைஞ்சலா இருந்தா சொல்லீருங்க நாங்க போயிருரேும்.

பரஞ்: போக வேண்டியதுதான். ஆனு நீங்க சங்கீதம் கேட்க வந்தீங்க சிலைகளைப் பார்த்தீங்க, ஆனு இந்த சிலைகளை செய்தவரைப் பார்க்க வேண்டாம்?

தேவ: ஐயா! எங்களையும் அறியாமல் அழைத்து வந்த அந்த சங்கீதத்தை இன்னொரு முறை கேட்கலாமா?

சித்ர: குருதேவா. பெண்கள் உங்கள் சங்கீதத்தை விரும்புகிருர்கள். பாடுங்கள்.

பரஞ்: நானு?...டேய் நீ போயி வேலையை கவனிடா.

சித்ர: கவனித்துக் கொண்டுதான் வருகிறேன் குருதேவா.

பரஞ்: என்னத்தை கவனிச்ச? அந்தக் கன்னங்கள் சரியில்ல.

சித்ர: அதுதான் மாம்பழக் கன்னங்கள்.

பரஞ்: அந்தக் கண்கள்?

சித்ர: மலர் விழியா மான் விழியா வென்று யோசிக்கிறேன்.

பரஞ்: அந்த உதடுகள்?

சித்ர: சிவந்து பழுத்த பலா கீற்றுகள்.

நீல: சிற்பி. நீ என்ன உதாரணத்தில் புலவனோ? அதிகமாக பேசுகிறாய்?

பரஞ்: என்ன சிஷ்யா! அளவு மீறி பேசுகிறாய்? அவர்கள் கோபம் கொண்டு போய்விட்டால்?

சித்ர: அவசிய மில்லை குருதேவா. தாங்கள் ஒருமுறை பாடி விட்டால் அதுவே போதும்.

பரஞ்: நான் பிறருக்காக பாட மாட்டேன். நான் பாடும் போதுதான் பிறர் கேட்க வேண்டும்.

சித்ர: என் குரு நாதர் மிகவும் கண்டிப்பானவர்.

நீல: கோபம் கொண்டால்?

சித்ர: எரிமலை வெடிக்கும், கனல் கக்கும்.

நீல: சந்தோஷத்தில் பாடினால்?

சித்: தாமரை மலரும், அமாவாசை இருட்டிலே கூட அழகு நிலா வட்டமிடும்.

பரஞ்: டேய் என்னடா பெண்களிடம் அளவு மீறி பேசிக் கொண்டிருக்கிறாய்?

சித்ர: தாங்கள் பெருமையைத்தான் சொல்லிக்கொண் டிருக் கிறேன் பிரபு.

நீல: போதும் பேசினது. வாங்கம்மா போகலாம். பெரிய வம்புக்காரர் போலிருக்கு.

(போனபின்)

சித்ர: இவ்வளவு தூரம் பேச எங்கேயடா கற்றுக் கொண் டாய்?

பரஞ்: என்னடா தோழா இப்படி கேட்கிறாய்? பெண்களின் கண்களைக் கண்டாலே கவி தானாக வரும் என்கிறார்களே அந்த சாத னத்தினால்தான் வார்த்தை சாதாரணமாக வந்து விட்டது.

## காட்சி 5

[ஆதவனைக் கண்ட தாமரைபோல், அம்புலி கண்ட மழலைச் செல்வம் போல் சித்ரசேனனைக் கண்ட சிருங்கார வல்லி தேவசுந் தரி ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கும் போது, அவள் தந்தை புவி யாளும் மன்னர் வந்து]

மன்: தேவ சுந்தரி.

தேவ: அப்பா.

மன்: தேவ சுந்தரி! உங்கள் சந்தோஷத்தில் நானும் பங்கு கொள்ளலாமா?

தேவ: ஒன்னும் இல்லையப்பா. வாருங்கள்.

மன்: ஏம்மா இன்னம் சாப்பிடல?

தேவ: இல்லையப்பா.

மன்: சாப்பிடாம எங்கேயம்மா போயிருந்தாய்?

தேவ: பச்சைமலை சாரலுக்கு. அங்கேயுள்ள அற்புத சிற்பங்கள் என் கண்ணைக் கவர்ந்தது.

நரே: என்ன தனியாகவா சென்றீர்கள்?

தேவ: என்ன அங்கே பேய் பூதம் உலவுகிறதா? எங்களை என்ன விழுங்கி விடுமா?

நரே: இல்லை. தாங்கள் எதிர்கால மகாராணி. அந்தஸ்துடன் செல்ல வேண்டும் என்றேன்.

தேவ: என் அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டியது தாங்கள் பொறுப்புதானே?

நரே: ஆம் இளவரசி.

தேவ: இனி எனக்கு நீங்கள்தான் பாதுகாவலர். என் பாதுகாப்புக்கு தாங்கள்தான் உத்தரவாதம்.

நரே: சாத்து கொண்டிருக்கிறேன்.

தேவ: இது உங்களுக்கு சம்மதம் தானே?

நரே: இதைவிட வேறு என்ன பெருமை இருக்க முடியும்.

தேவ: நீலவேணி. இனி நீதான் சேனாதிபதி.

நரே: இளவரசி.

தேவ: அப்பா. இனி நம் படைக்கு நீலவேணியையே சேனாதிபதியாக நியமித்து விடுங்கள்.

மன்: என்னம்மா சொல்கிறாய்?

தேவ: சேனாதிபதி ஒரு பெண்ணின் பின்னால் சுற்றித் திரியும் போது அந்தப் பதவிக்கு ஒரு பெண்தானப்பா தேவை.

மன்: பலே...பலே...சேனாதிபதியை ஏமாற்றி விட்டாய். என் மகள் சேனாதிபதியை நொடிப் பொழுதில் ஏமாற்றி விட்டாள்.

## காட்சி 6

[சேனாதிபதி நரேந்திரன் குமுறும் எரிமலையென, கொந்தளிக்கும் அலைகடலென, உறுமும் புலியென தன் இடம் வருகிறான். அப்போது]

அம்: கண்ணுளா!

நரே: நகைத்து விட்டாள் இந்த நரேந்திரன் யார் என்று புரியாமல்.

அம்: ஏன் என்னமோ போல் இருக்கிறீர்கள்?

நரே: உறுமும் எதிரிகளின் ஈட்டிகளைத் தாங்கி போர் முனையிலே பல வெற்றிகள் கண்ட இந்த நரேந்திரனை அவமதித்து விட்டனர்.

அம்: என்ன? தாங்கள் இந்த நாட்டின் சேனுதிபதி. அப்படி இருக்க உங்களை அவமதிப்பதா? அவர்களை உயிரோடவா விட்டீர்கள். உங்கள் வீரவாள் என்ன உறங்கிக் கொண்டா இருந்தது?

நரே: அவள் ஒரு இளம் பெண். அதனுல்தான் பேசாது விட்டேன்.

அம்: அன்பே! உங்களை வேதனைப் படுத்தியது இளவரசி தானே?

நரே: ஆம். அவள் எதிர்கால மகாராணியாம். நான் அவள் சேவகனும். அரசனும் தன் அருமை மகள் சொன்னதை அப்படியே ஆமோதித்து விட்டான்.

அம்: நானும் என்னமோ ஏதோவென்று நினைத்து விட்டேன்.

நரே: நரேந்திரன் நினைத்தால் இந்த நாட்டையே ஆள முடியும், நான் நினைத்தால் அந்த ஆணவக்காரியை மணந்து எனக்கு அடிமையாக்கி இந்த அந்தப்புரத்தில் ஒரு பதுமையாக்கவும் முடியும் என்னுல்.

அம்: ஆ! அவ்வளவு பெரிய வஞ்சகம் உன் நெஞ்சத்தில் வளர்ந்திருக்கிறதா?

நரே: இல்லை, விளையாட்டுக்குச் சொன்னேன். நீ இருக்கும் போது அந்த நெரிஞ்சி முள்ளயா நினைப்பேன். அவள் அழகை விட உன் அன்பே எனக்கு பிரதானம்.

## காட்சி 7

[மங்களம் சாப்பிட அழைக்கிருள். பரஞ்சோதி படுத்திருக்கிருன்]

மங்: டேய் பரஞ்சோதி. சாப்பிட வாடா.

பரஞ்: எனக்கு சாப்பாடு வேண்டாம்.

மங்: என்னடா வரமாட்டேங்கிற?

சித்ர: அவன் மன நிலையில் அவனுக்கு இதெல்லாம் பிடிக்காது.

மங்: என்னப்பா சொல்ற?

சித்ர: பச்சை மலைப்பக்கம் ஒரு பெண் அவனைப் பார்த்து சிரித்து விட்டாள். அதனால் அவனுக்கு உணவு செல்லாது உறக்கம் பிடிக்காது.

மங்: நீ என்னடா குறும்பு செய்த எதற்காகடா சிரிச்சா?

பரஞ்: நான் இல்ல அத்தை. இவன்தான் சிரிச்சான் வம்பு பேசினன்.

மங்: சரி, ரெண்டு பேரும் தானு? வாங்கடா போகலாம்.

சித்: வாடா வா...

பரஞ்: போடா.

[சாப்பிடும் போது]

சித்: அம்மா. நிறைய போடுங்க. ரொம்ப சூடா இருக்கான் குளிர்ச்சி யாகட்டும்.

பரஞ்: பாருங்கத்தை சும்மா அடிச்சிக்கிட்டே இருக்கிறன் ஹீம் சாம்பாரு போடுங்க.

சித்: தின்னுடா.

பரஞ்: சிரிக்கிறன்.

மங்: இன்னம் சின்னப் பிள்ளை மாதிரி இருக்கலாமா?

சித்: குழந்தை.

மங்: போதும் சாப்பிடுங்க.

சித்: என்ன?

பரஞ்: பச்சை மிளகாய்......

[சித்ரசேனனின் தந்தை மன்னரின் மெய்காப்பாளர். அவர் வந்து]

மெய்: மங்களம்...

பரஞ்: டேய்

சித்: அப்பா...அப்பா......

பரஞ்: என்னடா ஹீம் சாப்பிட்டுட்டு கிளம்பு.

மெய்: ஹீம். நம் அருமைப் புத்திரன் சாப்பிட வந்தானு?

மங்: வரும் போதே அர்ச்சனை தானு?

மெய்: இல்லை. அந்த வேலையாவது ஒழுங்கா நடக்கட்டுமேன்னு......

மங்: சரிதான். அவன் சாப்பிட்டுட்டான் நீங்க வாங்க.

மெய்: இல்ல இன்னம் அவன் சின்ன குழந்தைப் பிள்ளையா இருக்கிறனே? ஊரைப்போல, உலகத்தைப் போல ஒரு தொழில்

பார்க்கணுமேங்கிற பொறுப்பு வேண்டாமா? அதுதான் சொன்னேன்.

மங்: அவங்க அப்பாவுக்கோ அரண்மனையிலே உத்தியோகம். அவனே குடும்பத்துக்கோ ஒரே பிள்ளை. அப்படியிருக்க ஏன் கஷ்டப்படணும்?

மெய்: மங்களம். உன்ன மாதிரி தாயார் செல்லம் கொடுக்கிற பிள்ளைகள்தான் உருப்படியாகிற தில்லே.

மங்: அப்படி தப்பா நினைக்காதீங்க. அவன் ஒரு காலத்திலே ரொம்ப பெரியவன்னு பேர் எடுக்கப் போமுன்.

மெய்: எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா? எல்லோரையும்போல நம்ம பையனும் நன்முக வாழ வேண்டும். என்றுதான் இவ்வளவு கவலைப் படுகிறேன்.

மங். ஒன்னும் கவலைப்படாதீங்க. அது அது நடக்க வேண்டியது தானு நடக்கும்.

## காட்சி 8

[அழகு ரூபவதி தேவசுந்தரி தன் தோழியுடன் அழகு மாரனைக் காண வர]

பரஞ்: வாங்க...வாங்க...வாங்க நீங்க வருவீங்கன்னு நினைச்சேன் வந்துட்டீங்க-

நீல: ஆமா. பாடினது நீங்கதானு?

பரஞ்: என்ன சந்தேகம்? கேவலம் சங்கீத சாகரத்துக்கே கேவலம்.

நீல: அவ்வளவு பெரிய கேவலம் எதுக்கு? நீங்க பாடுங்க.

பரஞ்: நான் பாட வேண்டுமா? நான் பாடினு நீ ஆடணும்.

நீல: தெரியாதுங்களே!

பரஞ்: அப்ப நீ பாடு. நான் ஆடுறேன்.

நீல: ஐயயோ. வேண்டாம் நீங்க வீணு உடம்பை அலட்டிக்கிடாதீங்க.

பரஞ்: ஆமா உங்களுக்கு வீட்டில வேலே இல்லையா?

நீல: ஏன்?

பரஞ்: சங்கீதம் சங்கீதமுன்னு மலேக்கு மலே தாவிக் கிட்டு இருக்கீங்களே காலாகாலத்திலே ஆகி கழுத்தில விழுந்து கையிலே... வள...புள...வள...புள...ஆயின்னு......

நீல: என்ன பேச்சி மேலபோகுது?

பரஞ்: என் பேச்சி ஒன்னும் மேலபோகல, உன் கூடவந்த மூச்சிதான் பிரிஞ்சி போயிக்கிட்டு இருக்கு பாரு... (தேவ சுந்தரி

தன் காதலனைத் தேடி போய்க் கொண்டிருக்கிருள்) ஹிம்... அது ஒன்னு மில்ல. இப்ப நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு நான் சொல்லட்டுமா?

நீல: ஆருடமா?

பரஞ்: இல்ல, அனுபவத்தில கண்ட உண்மை. ஒரு ஆணைத் தேடி ஒரு பெண் தன்னந்தனியா வந்தா...

நீல: தனியா வந்தா என்னவாம்...

பரஞ்: உம் உனக்கும் தெரியுது, எனக்கும் புரியுது.

நீல: என்ன குரு?

பரஞ்: தப்பு. இனிமேலே குருநாதான்னு கூப்பிடு. ஏன் வார்த்தையை பாதியா வெட்டுற. இனிம குருநாதான்னு கூப்பிடு.

நீல: நான் குருவா?

பரஞ்: ஏன்னு எனக்கு இது எல்லாம் புதுசு பாரு. இனிமே நீதான் குரு. நான் சிஷ்யன்.

நீல: நான் குருவா?

பரஞ்: ஒரு பெண்ணோட தன்னந்தனியா... ஒரு பெண்ணோட வெட்கமா...இருக்கு......

## காட்சி 9

[சிலை செதுக்கும் சிற்பி தன் நிலைமறந்து நிற்கிருன். அழகு வன்னத்தின் எழில் உருவம் கண்டு தன்னை மறந்து நிற்க சித்ரசேனன]

சித்: சிற்ப சுந்தரி, ஏன் மௌனமாக இருக்கிருய். வாய் திறந்து பேசக் கூடாதா?

தேவ: பேசலாம். ஆனுல் பேச்சின் விளைவு சிலை சின்னப்பட்டு விட்டால்.

சித்: இந்த சிலை. ஆண்டவன் அளித்த அற்புத சிருஷ்டி.

தேவ: அவ்வளவு அழகா?

சித்: இதை வர்ணிக்க வார்த்தையே இல்லை. முத்துப் பல் அழகையும் மோகனப் புன்னகையையும் சித்திரத்தில் தீட்ட முடியுமா? கூந்தலுக்கு கூற முயன்ருல் தென்றல் தாலாட்டும். நடை அழகுக்கு நான் உவமை கூற முயலும் போது, அன்னம் நான் என்று எதிர் நிற்கும். ஹீம் கற்பனைக்கும் எட்டாத பேரழகு.

தேவ: நீங்க தொடங்கினதை முடிக்க வேண்டாமா?

சித்: தொடங்கி விட்டேன். முடிக்க வேண்டியது உன் பொறுப்பு. வெற்றியளிக்கும் என்று நான் நினைத்தது பொருத்தம் இல்லையா.

தேவ: பொருத்தம்தான்.

சித்: நான் நினைக்கிறேன். மனம் மகிழ்கிறது. ஆனால் காலம் மறைக்கிறது. ஆசை அலைமோதுகிறது. ஆனால் காலம் அதற்கு அணை போடுகிறது. அதனால் மனம் ஆறுதல் பெற மறுக்கிறது. இன்ப கனவு காண இதயம் நினைக்கிறது. கண்கள் உறங்க மறுக்கிறது. இதயத்தில் நெருப்பாக காய்கிறது எண்ணம். அதை அணைக்க மார்க்கம் தான் தெரியவில்லை.

[கீழே விழுந்த உளியை எடுத்து கட்டழகன் கையில் கொடுக்கிறாள் கட்டழகி. கட்டழகன் கிட்ட நிற்கும் பொட்டழகியை எண்ணியபடியே உளி வைத்து சிலையில் தட்ட பெயர்ந்து விட்ட கல், பெண் மானின் சிரத்திலே பேரம் பேசுகிறது. பீரிடுகிறது இரத்தம். பெரும் பரபரப்படைகிறான் மாரன்]

சித்: அடிபட்டு விட்டதா? எங்கே?

தேவ: ஒன்று மில்லை.

சித்: ஐயோ இரத்தம் கூட வருகிறதே. இங்க யாரும் இல்லையா...அட பரஞ்சோதி அட பரஞ்சோதி.

[சோலையில் ஜோடிக் கிளிகளாக. காதல் என்ற மோடி இசைக்கு மயங்கிய இரு உருவங்கள்......அவர்கள்தான் பரஞ்சோதி நீலவேணி. அவர்கள் காதில் அபயக்குரல் விழவே]

நீல: கூப்பிடுறாரு.

பரஞ்: ஹீம் சமயம் சந்தர்ப்பம் தெரியாம சங்கூதுறான்.

நீல: அங்க என்னமோ ஏதோ......

பரஞ்: அங்க போறதுதான் தப்பு தெரியுமா?

நீல: விடுங்க கையை.

பரஞ்: நான் கையை விட்டுட்டேன். நீதான காந்தம் போல இழுத்துக்கிட்டு இருக்க.

[இருவரும் வர இளவரசியின் சிரசில் சிறு காயம் பட்டிருப்பதைக் கண்டு]

நீல: அம்மா அம்மா...என்னம்மா இது?

தேவ: ஒண்ணு மில்லே. கீழே விழுந்துட்டேன்.

நீல: அம்மா, நாம வந்த நேரம் சரியில்ல!

பரஞ்: எந்த மடையன் சொன்னது? நீங்கதான் நல்ல முகூர்த்த நேரம் பார்த்து வந்திருக்கீங்களே.

நீல: சுத்த பஞ்சாங்க பேர்வழிபோல இருக்கு. வாங்கம்மா போகலாம்.

சித்: ஐயோ, சங்கீதம் கேட்காம போறீங்களே. குருநாதா பாடுங்க.

பரஞ்: சிஷ்யா. இன்று வேண்டாம் நாளைபாடுவோம். சிஷ்யா! கனிகளை பறித்து வா. கன்னியர்களை உபசரித்து அனுப்புவோம்.

நீல: உங்க உபச்சாரம் போதும் வாங்கம்மா போகலாம்.

பரஞ்: அந்தோ...அந்தோ...என்ன தனியாகவா?

நீல: நாங்க வரும்போதும் தனியாகத்தான் வந்தோம் எங்களுக்கு யாரும் துணை வேண்டியதில்லே.

[போகும்போது]

பரஞ்: ஆகா...பெண்களின் பின் அழகைப் பார்ப்பது தவறடா. ஆகா... ஆகா...

## காட்சி 10

[தேவசுந்தரி நீலவேணியிடம்]

தேவ: நீலவேணி...

நீல: அம்மா... ஏம்மா, அந்த சிற்பியின் காந்தம் ஆளை விட்டதா?

தேவ: யேய்... என்ன சொன்ன? ஹீம். ஆமா. திடீருன்னு எங்க காணமப் போயிட்ட. அப்படி முக்கிய வேலே என்ன. சொல்... என்ன வேலே.

[மன்னர் வந்து]

மன்: இளவரசியை விட்டுவிட்டு எங்கே போயிருந்தாய்.

தேவ: இல்லேயப்பா.

மன்: தேவசுந்தரி! தலேயில காயம் எப்படிப் பட்டது?

தேவ: இது...

மன்: நீலவேணி! எப்படிப் பட்டது?

நீல: தோட்டத்திலே விளையாடிக்கொண் டிருக்கும் போது மரக்கிளை பட்டுருச்சி அரசே.

தேவ: அப்பா! இந்தச் சின்ன விசயத்துக்கு ஏன் இப்படிக் கவலேப்படுறீங்க.

மன்: கவலேப்படாம இருக்க முடியுமாம்மா. உன் தாய் இறக்கும்போது சொன்ன வார்த்தை என் காதிலே சதா ஒலித்துக் கொண்டே இருக்கிறது. தேவசுந்தரி! உன் அழகுக்கும் புத்திசாலித் தனத்துக்கும் அந்தஸ்துக்கும் தகுந்த ஒரு கணவனேத் தேர்ந்தெடுக்கும்வரை என் கவலே தீராது.

தேவ: அப்பா!

மன்: என்னம்மா?

தேவ: ஒன்னுமில்லப்பா.

மன்: சொல்லம்மா.

தேவ: அப்பா! நான் எது கேட்டாலும்...

மன்: நிறைவேற்றத் தயாராய் இருக்கிறேன். அதைவிட ஆனந்தம் வேறு என்ன இருக்கிறது எனக்கு.

தேவ: அப்பா! பச்சை மலையிலே ஒருவரின் சங்கீதம் கேட்டேன்.

மன்: பச்சை மலையிலா?

தேவ: ஆமாப்பா. நம் அவையில் எவ்வளவோ சங்கீதம் கேட்டிருக்கிறேன். ஆனால் அதற்கு ஈடு சொல்லவே முடியாதப்பா.

மன்: அவ்வளவுதான? இப்பவே ஏற்பாடு செய்கிறேன்.

தேவ: அப்பா.

## காட்சி 11

சித்: டேய் பரஞ்சோதி! என்ன அங்கேயே பார்த்துக்கிட்டு இருக்க?

பரஞ்: உனக்காகத்தான். உன் ஜதை வருதான்னு பார்த்துக்கிட்டு இருக்கேன்.

சித்: அவசியமானல் நீயே போயி அழைத்து வாயேன்.

பரஞ்: டேய் என்னடா. இன்னம் பிள்ளையாரையே காணம் அதுக்குள்ள மூஞ்சூரு எப்படியடா வரும்? (பல்லக்கு வர) டேய்சித்ரசேன... டேய்... டேய்... பல்லக்கு வருதுடா டேய்... பல்லக்கு வருதுடா.

சித்: பல்லக்கா?

பரஞ்: ஆமாண்டா ஆமா! ஓடியா அங்க பார்த்தியா? (பல்லக்கு வந்தவுடன்) யாரப்பா நீங்க?

ஒரு: இங்க குருநாதருங்கிறது யாருங்க?

பரஞ்: குருநாதரா? நான்தான் நான்தான்.

ஒரு: நமஸ்காரங்க.

பர: என்ன எங்க வந்தீங்க? எதுக்காக வந்தீங்க?

ஒரு: உங்களை அழைத்து வரும்படி மகாராஜா உத்தரவு.

சித்: குரு! உங்களைத்தான் அழைத்துக்கொண்டு வரச்சொல்லியிருக்கிறார்கள்.

பரஞ்: என்னடா சித்ரசேன! இந்தப் பொண்ணுக கிட்ட விளையாடினது வம்பாவுல போச்சி. ஹீம் மன்னரு பல்லக்கு அனுப்பியிருக்காரு.

சித்: ஹீம் (காதில்) நீ போ. நானும்கூட வருகிறேன். பயப் படாதே. புறப்படுங்கள் குருதேவா. ஹீம் தூக்குங்கள்.

[பரஞ்சோதி பல்லக்கில் ஏற, சித்ரசேனன் உடன் செல்கிருன்]

## காட்சி 12

[அரச அவையில்]

அமை: இசைவாணரே! தங்கள் இசை இன்பத்தைக் கேட்டு அனுபவிக்க மன்னரும் இந்த மகாப் பேரவையும் காத்திருக்கிறது.

பரஞ்: ஐயோ! இசை எனக்கு ஒன்னுமே தெரியாதுங்களே!

அமை: நிறை குடம் தழும்பாது என்பதற்கு நீரே உதாரணம்.

பரஞ்: ஐயயோ! எனக்குத் தெரியாதுங்களே!

மன்: ஹீம் தெரிந்ததைப் பாடு.

பரஞ்: ஐயா... என்னைத் தயவு செய்து மன்னிச்சிருங்க நான் வித்வான் இல்ல.

நரே: இந்தச் சங்கீத மண்டபத்தில் பாடுவதற்கு நீ பெரும் புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

பரஞ்: சத்தியமா எனக்குப் பாடத் தெரியாதுங்க.

நரே: நீ சபையை அவமதிப்பதை நான் அனுமதிக்க முடியாது. (பரஞ்சோதியைஅடிக்க, சித்ரசேனன்பாடுகிருன். சபையோர் அனைவரும் மகுடி இசை கேட்ட நாகம்போல், மதுவுண்ட வண்டு போல் மயங்குகின்றனர் அவன் இசைக்கு. இளவரசியின் இதயம் இனிக்கிறது. மன்னரின் மனம் மகிழ்ச்சியால் நிரம்புகிறது)

[பாட்டு]

[பாட்டு முடிந்தவுடன்]

மன்: ஆகா! அமுத மழை பொழிந்தீர். இசை மன்னரே இது போன்ற இசையை நான் இதுவரை கேட்டதில்லை. அதை இன்று கேட்கும் பேறுபெற்றேன். இன்று முதல் உம்மை என் ஆஸ்தான கவிஞராக்குகிறேன்.

சித்: அரசே! பாடுவது எனக்குத் தொழில் அல்ல. நான் சங்கீதத்தை முறையே பயின்றவனும் அல்ல நான் பாடவில்லை. என் தோழனை அவமதித்து இங்கு அடித்த அடியின் எதிரொலியைத்தான் நீங்கள் கேட்டீர்கள். அன்று பச்சைமலையில் சந்தித்த பெண்கள் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் என்று மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால் இன்று இந்தச் சந்தர்ப்பமே ஏறபட்டிருக்காது.

மன்: இசைவாணு! நீ யார்?

மெய்: அரசே! அவன் என் மகன். அவனுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

மன்: பெற்ற மகனைப் பெரிய மனிதனுக்கிப் பெருமை பெற்றுவிட்டாய் நீ. உன் மகனுக்கு வேறு வேலை ஏதாவது தெரியுமா?

மெய்: சிற்ப வேலை கற்றுக்கொண்டிருக்கிறுன்.

மன்: சிற்பவேலையா?

தேவ: ஆமாப்பா. தெய்வ லட்சணம் தோற்றம் அளிக்கும் அற்புத சிற்பங்களை நானே கண்டேன்.

மன்: மிக்க மகிழ்ச்சி. இப்பவே உம் மைந்தன் தமிழ்த்தாயின் திருவுருவத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

மெய்: அரசே! தங்கள் உத்தரவை என் மகன் நிச்சயம் நிறைவேற்றுவான்.

## காட்சி 13

[மெய்க்காப்பாளர் தன் இல்லம் வர, அவர் மனைவி மங்களம்]

மங்: என்ன இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டீர்களே? ரொம்ப ஆச்சரியமா இருக்கே?

மெய்: நம் மகனுக்கு அரண்மனையில் வேலை கிடைத்திருக்கிறது.

மங்: அப்படியா! ரொம்ப சந்தோஷம். என்ன வேலை?

மெய்: சிற்ப வேலைதான்.

மங்: அப்படியா! அவனுக்குப் பிடித்த வேலைதான்.

மெய்: அரசருக்கு அவன் மேல் அளவு கடந்த பிரியம் மங்களம்.

மங்: எல்லாம் என் பிராத்தனையின் பலன்தான்.

மெய்: அதோ உன் மகன் வர்றுன்.

மங்: சித்ரசேனு! இப்பத்தான் உன் அப்பா மனசு நிம்மதியாச்சி. (பரஞ்சோதியைப் பார்த்து) டேய் ஏன்டா ஒரு மாதிரியா இருக்க? ஏன்டா ஒரு மாதிரி இருக்க. அவனுக்கு உத்தியோகம் கிடைச்சதுக்கு சந்தோஷப்படாமே...

பர: அவனுக்கு சந்தோஷம் எனக்குத்தான் வருத்தம்.

மங்: ஏன்டா உன் முகம் வீங்கியிருக்கு!

பர: ஒன்னுமில்ல, அவனுக்கு வேலை கிடைச்சதில அதனுல, என் முகம் வீங்கிப் போச்சி.

## காட்சி 14

பர: இவன் ஏன் இஞ்சி தின்னவன் மாதிரி முகத்தை உம்முன்னு வச்சிக்கிட்டு இருக்கான். டேய்... இந்தாடா! நாம மலையிலயும் காட்டுலயும் அலஞ்சிக்கிட்டு இருந்தோம். இப்ப குளு குளுன்னு

இந்த இடத்தில இருக்கமே. இப்பவாவது சிரிக்கப்படாதா? சிரிடா கொஞ்சம். நீ யேன்டா சிரிப்ப ஒருவேளை இளவரசி வந்தா இந்த இளவரசரு சிரிப்பாரோ. அப்பக்கூட சிரிக்கமாட்டடா. உன்னைச் சிரிக்க வைக்கணுமுன்னு நான்தான்டா சிரிப்பாச் சிரிக்கணும்.

சித்: டேய்! வாடா இங்க. (வர) யார்கூடடா பேசிக்கிட்டு இருந்த?

பர: என்கூட யாருடா பேசுவா? என் அந்தராத்மாகூடப் பேசிக்கிட்டு இருந்தேன். டேய்!

சித்: என்னடா!

பர: என்னமோ, உங்க அப்பா அம்மா செய்த புண்ணியத்தால உனக்கு அரண்மனையிலே வேலே கிடைச்சிருச்சி. இனிமே நான் செய்த புண்ணியத்தால உனக்கும் இளவரசிக்கும் கல்யாணமாகி நீ இளவரசனுகிட்டா நான் மந்திரி யாகிருவேன். பிறகு நம்ம மூஞ்சூர போக்குவரத்து மந்திரியாக்கி...

சித்: டேய்! எலுமிச்சம்பழம் இருக்குமா?

பர: எலுமிச்சம்பழமா? அதைத்தான் அன்னைக்கே அத்தை ஊறுகாய் போட்டுட்டாங்களே. ஆமா எதுக்கு?

சித்: முட்டாள். உன் தலையிலே தேய்ப்பதற்கு.

பர: டேய்! எனக்கு ஒன்னும் பித்தம் இலல. உனக்குத்தான் பித்தம் அதிகமா இருக்கு. இளவரசி வந்தவுடனே எலுமிச்சம் பழத்தை அறுத்து தலையில ஊற்றி மண்ணைப் போட்டுத் தேய்த்து சூடு போடச் சொல்லு... (தேவசுந்தரி வர) டேய் டேய் வந்துட்டாங்கடா... டேய்... டேய்... அவங்க வர்றாங்கடா. டேய் .. நீ... ஹீம்... ஹீம். யேய்... இங்... டேய்...

[போகிறான்]

தேவ: ஆகா! உளி தட்டும்போது தாளத்தோடு சேர்ந்த நாதம்... ஹீம். பேசமாட்டீர்களா இளவரசே!

சித்: இல்லே. நான் அடிமை.

தேவ: தங்களுக்கு நான் அடிமைதான்.

சித்: என்னைச் சோதிக்க விரும்புகிறீர்களா?

தேவ: தாங்கள்தான் என்னைச் சோதிக்கிறீர்கள். வெறுக்கிறீர்கள்.

சித்: ஆம். நான் தங்களை வெறுக்கிறேன். தாங்கள் ஆளப் பிறந்தவர்கள் என்ற காரணத்தினால்.

தேவ: என்னை ஆளப்பிறந்தவர்கள் நீங்கள்தான்.

சித்: நம் இருவருக்கும் இடையே அந்தஸ்து என்ற அகன்ற அகழி இருப்பதைத் தாங்கள் உணரவில்லை.

தேவ: மனம் நிறைந்தபின் அந்தஸ்து பேதத்துக்கு இடமில்லையே.

சித்: நிலவைப் பிடித்து விளையாட நினைக்கும் பிள்ளைப் பருவத்தில் இல்லை நான்.

தேவ: ஒரு பெண்ணின் உள்ளத்தை உணராமல் சோதிக்கிறீர்கள். உங்கள் நெஞ்சத்துக்கு நீங்கள் வஞ்சனை செய்கிறீர்கள்.

சித்: என் நெஞ்சம் நினைத்தது உண்மைதான். ஆனால் இப்போது எட்டாத தூரத்தில் இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன்.

தேவ: காதலில் எப்படியும் வெற்றியடைய வேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

சித்: அப்படித்தான் அன்று சாதிக்க நினைத்தாள் அமராவதி. அவளை இரத்தச் சேற்றில் புதைத்துவிட்டான் அரசன்.

தேவ: செத்தும் பின் புகழ் நிலைத்தால் நான் ஆயிரம் முறை சாவதானாலும் தயார்.

சித்: துன்பத்தை விலை கொடுத்து வாங்கப் பார்க்கிறீர்கள்.

தேவ: என் தந்தைதானே சம்மதிக்க வேண்டும்?

சித்: தங்கள் தந்தை சம்மதித்தாலும் என் தந்தை சம்மதிக்க வேண்டுமே? தாங்கள் போகலாம்.

## காட்சி 15

[நீலவேணி கரத்தை பரஞ்சோதி இழுக்க]

பர: அடச்சீ! நீ ஒரு பெண்ணாட்டம்.

நீல: ஹீம் விடு.

பர: விடமாட்டேன்.

[கீழே விழ]

நீல: என்ன அடிகிடி பட்டுருச்சா?

பர: அடிபடல, கிடிதான் பட்டுருச்சி. கீழ புடிச்சித் தள்ளி விட்டுட்டு அடிகிடி பட்டுருச்சான்னு கேட்கிற? ஐயோ...பொன்னான கையி மண்ணாப் போச்சே. இந்தா இளவரசி...

நீல: இளவரசிக்கு என்ன?

பர: இளவரசிக்கு ஒன்னுமில்ல. இப்ப நீயி... நானு அதும் நாம இப்படி இருக்கோம். அவங்க எப்படி?

நீல: இப்படி. உன் தோழனுக்குத்தான் இளவரசின்னாக் கசக்குதே?

பர: அப்படி நினைக்காதே. அவன் அம்மாவாசைக்குக் கட்டுப்பட்டவன்.

நீல: என்ன இது அம்மாவாசையும் நீயும்?

பர: அம்மாவாசையில்ல. அம்மா ஆசைக்குக் கட்டுப்பட்டவன்.

நீல: ஓ... ரொம்பப் பொல்லாதவரோ!

பர: என்னப் பற்றி உனக்கு முன்னப்பின்னத் தெரியாது. அவனவிட நான் வயசு உள்ளவன்தான். சொந்தப் பிள்ளையைவிட அத்தை என்னைப் பிரியமாத்தான் வச்சிருக்காங்க. என்னமோ எனக்கும் ஆறுவேளை சோற்றுக்குப் பஞ்சமில்லே. ஏதோ எங்க அத்தை தினம் கோயிலுக்குப் போயி சாமி கும்பிடுற புண்ணியத்தால அவனுக்கு அரண்மனையில வேலை கிடைச்சிருச்சி. நானும் அவன் கூடவே இங்க வந்துட்டேன்.

நீல: அவங்க கோயிலுக்குக்கூடப் போவுங்களா?

பர: அப்ப உங்களப்போல புறாக்களைச் சுற்றிக்கிட்டுத் திரிவாங்கன்னு நினைச்சயா?

நீல: அப்படியா? நான் வர்றேன்.

பர: யேய் இந்தா! நீலவேணி! நீலவேணி... நீல... வேணி.

## காட்சி 16
[கோயிலில்]

ஒரு: என்ன மங்களம். என்கிட்ட ஒரு வார்த்தைகூடச் சொல்லலியே.

மங்: என்னம்மா அது?

மற்: உன் பையனுக்கு அரண்மனையிலே வேலை கிடைச்சிருச்சாமே?

மூன்: அப்ப உடனே கலியாணத்துக்கு ஏற்பாடு செய்யக் கூடாது?

ஒரு: அரண்மனையிலே வேலை பார்க்கிற பையனுக்கு கலியாண முன்னு நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு பொண்ணக் கொடுப்பாங்க.

மங்: கலியாணத்துக்கு இப்ப என்ன அவசரம் அவனுக்குன்னு ஒருவள் பிறந்தே இருப்பாள். வேளைவந்தா தன்னால வரும்.

ஒரு: குடும்பத்துக்கு ஏற்றவளா பார்க்க வேண்டியது உன் கடமைதான?

மங்: ஆமா...ஆமா......

## காட்சி 17

நீல: அம்மா...அம்மா...

தேவ: என்னடி?

நீல: தெய்வ பிரசாதம். உங்க எண்ணம் நிறைவேறும்.

தேவ: அந்த நம்பிக்கையே போய் விட்டது. நான் நினைத்தது எல்லாம் தடம் மாறிவிட்டது.

நீல: இல்லம்மா...வந்து...(காதில் சொல்கிருள்)

தேவ: ஆ...அப்படியா? நான் இப்பவே போகிறேன். அவர்கள் அன்பைப் பெறுவேன் அவர்கள் சம்மதத்தை அடைவேன்.

நீல: அம்மா! நீங்கள் போவது அரசருக்கு தெரிந்தால்?

தேவ: தெரியட்டும். எப்படியும் ஒரு நாள் தெரியத்தான் போகிறது. இதற்கு எப்படியும் ஒரு முடிவு காண்பேன். நான் காதலித்தவரையே மணப்பேன்.

நீல: அம்மா! நீங்க இளவரசியின்னு தெரிஞ்சா அந்த அம்மா சம்மதிப்பாங்களா?

தேவ: அவர்கள் சம்மதிக்கும் வரை நான் இளவரசி யென்று தெரிய வேண்டியதே இல்லே.

## காட்சி 18

[தேவ சுந்தரி கோயிலுக்கு சாதாரண பெண்போல் சென்று பாடுகிருள்]

(பாட்டு)

[பாட்டு முடிந்து ஆராதனே முடிந்தவுடன் மங்களம் தேவ சுந்தரியிடம்]

மங்: அம்மா! நீ யாரம்மா? இந்த சின்ன வயசிலேயே உனக்கு ஏற்பட்ட பக்திக்கு நான் பாராட்டுகிறேன்.

தேவ: எல்லாம் உங்களேப்போல பெரியவங்களேப் பார்த்து கத்துக்கிட்டேன்.

மங்: உன் பெயரென்னம்மா? உன்னேப் பெற்ற அந்த மகாராசி யாரம்மா?

தேவ: என் தாயார்!......

மங்: ஐயோ பாவம். கவலேப் படாதம்மா. எல்லோருக்கும் தாயாக அந்த பராசக்தி இருக்கும் போது என்னம்மா குறை. என் வீடு பக்கத்திலதான், வர்றீயாம்மா?

தேவ: இப்ப இல்ல, இன்னெரு தடவை.

மங்: மறக்காமல் வாம்மா.

தேவ: நான் போயிட்டு வர்றேம்மா.

## காட்சி 19

சேவ: எஜமான்.

சித்: ஏன்?

சேவ: தாங்களை அழைத்து வரும்படி இளவரசியின் உத்தரவு.

சித்: உத்தரவு! எதற்காக?

சேவ: தெரியாதுங்க.

சித்: ஹூம்......

## காட்சி 20

[சித்திரசேனன் வர]

தேவ: வாருங்கள். உட்காருங்கள்.

சித்: அதிகப் படியான உபசாரம் தேவையில்லை, என்னால் ஆகவேண்டியதைச் சொல்லுங்கள்.

தேவ: இந்த கனியை சாப்பிடுங்கள்.

சித் அவ்வளவு அருகதை இந்த ஊழியனுக்கு ஏது?

தேவ: நீங்கள் வெறுக்க இது விஷம் இல்லையே?

சித்: அமுதமாக இருக்கலாம். அமுதத்திற்கும் முன்னே இருந்தது ஆலகால விஷம்.

தேவ: அந்த விஷத்தையும் உண்டார் சிவன்.

சித்: அந்த விஷத்தை தொண்டையில் நிறுத்த பக்கத்தில் பார்வதி இருந்தாள்.

தேவ: இதோ நான் உங்கள் பக்கத்தில் இருக்கிறேன். நான் ஒவ்வொரு பொருளிலும் உங்கள் திரு உருவத்தையே காணுகிறேன். இதோ என் இதயத்தில் நிறைந்திருக்கும் ஓவியம். இதை என்றும் நான் மறப்பதற்கு இல்லை. என் இதயத்திலே நிறைந்திருக்கும் இன்பக் காதலை கலைத்து வெறுத்து என் எண்ணத்தை ஆனந்தத்தைக் கலைக்காதீர்கள்......

[சித்ரசேனன் செல்ல பின் அங்கு நரேந்திரன் வருகிறான்]

நீல: இளவரசி! சேனாதிபதி.

நரே: இளவரசி! ஏன் இந்தக் கலக்கம்? தாங்கள் இளம் இதயத்தை துயரம் படியச் செய்த அந்தக் கொடியவனை......

தேவ: சேனாதிபதி! என் அந்தப்புரத்துக்குள் என் அனுமதியின்றி எவரும் வரக் கூடாது என்பது தாங்களுக்கு தெரியாதா?

நரே: இளவரசி, நான் படைத்தலைவன். தாங்கள் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டியவன். எந்த சமயத்திலும் எங்கும் வரலாம் என்பதை தாழ்மையுடன் நினைவு படுத்திக் கொள்கிறேன்.

தேவ: நீர் என் சேவகன் என்பதை கவனப் படுத்தி எச்சரிக்கிறேன்.

நரே: தன்னை மறந்தவர்களுக்குதான் எச்சரிக்கை தேவை. தாங்கள் குடும்ப கௌரவத்தையும் தாங்களையும் காக்க வேண்டியதே என் கடமை. அதுவே என் லட்சியம்.

தேவ: உன் லட்சியம் எனக்குத் தெரியும். மன்னரின் மதியை மயக்கி என்னை வசப்படுத்திக் கொள்ள நீ செய்யும் சூழ்ச்சி.

நரே: இளவரசி! பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விடாது என்பதை உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

தேவ: சேனாதிபதி! நிறுத்தும் என் பொறுமையை சோதிக்காதே.

நரே: அதனால்தான் நானும் சொல்கிறேன். தாங்கள் ஏமாந்து விட்டால் அரச குடும்பத்திற்கே அவமானம் என்று.

## காட்சி 21

[தேவசுந்தரி எளிய உடையில் மங்களத்திடம் வந்து]

தேவ: அம்மா!

மங்: யாரு? செல்லம்மா! வாம்மா வா! ஞாபகமா வந்துட்டயே?

தேவ: நான் அறைக்கிறேன்...

மங்: வேண்டாம்மா. தங்க விக்ரகம் மாதிரி இருக்கயே? இந்த வேலையை நீ ஏன் செய்யணும்?

தேவ: அம்மா. எவ்வளவுதான் ஐஸ்வரியம் இருந்தாலும் பெண்ணாக பிறந்தவர்கள் குடும்ப வேலைகளை செய்துதான் ஆகணும்.

மங்: ஏம்மா! உனக்கு அண்ணன் தம்பி அக்கா தங்கை யாராவது?

தேவ: நான் ஒருத்திதான்.

மங்: அய்யோ பாவம்.

[சமையல் செய்ய, கையில் சுட]

தேவ: ஆ.........

மங்: உம்...உம்...என்ன இது? எங்கே? அட...அட...கையெல்லாம் எவ்வளவு சிவந்து போச்சே?

தேவ: எனக்கு இதில் பழக்கம் இல்லையம்மா!

மங்: கலியாணத்துக்கு பிறகுதான் இந்த பாடம் எல்லாம் பழகிக்கிடணும்.

தேவ: ஹீம். இந்தக் கலியாணத்தை நினைத்தாலே எனக்குப் பிடிக்காது.

மங்: ஹீம்.....

## காட்சி 23

(சிலை செய்ததற்கு பரிசளிப்பு)

மன்: அன்பர்களே! இந்த தெய்வ கலை பொருந்திய சிற்பத்தை செதுக்கிய இவர் ஒப்பற்ற கலைஞர்தான். இதைக் காணும் போது நான் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். இந்த ஒப்பற்ற கலைச் செல்வத்தை உருவாக்கிய இந்த கலைஞருக்கு என் அன்பளிப்பு.

[மாலையை பரிசளிக்கிறார், பின் அம்பிகா நடனமாடுகிறாள்]

பாட்டு

(ஆடல் பாடல் முடிந்தவுடன் சபை கலைய சித்திரசேனனிடம் அம்பிகா)

அம்: வணக்கம் அண்ணா.

பர: வாழ்த்துகிறோம்.

சித்: அம்பிகா. உன் நடனம் மிகவும் பிரமாதமாக இருந்தது. நடனக் கலைக்காகவே பிறந்தவள் நீ.

அம்: ரொம்பவும் பாராட்டுகிறீர்கள். தாங்கள் பாராட்டு வார்த்தையுடன் தானா? பரிசு கிடையாதா?

சித்: பரிசுதானே? இதோ!

அம்: வேண்டாம் அண்ணா.

சித்: ஏன்?

அம்: அது அரசர் உங்களுக்காகவே கொடுத்தது. வேறு ஏதாவது?

சித்: வேறு என்ன வேண்டும். தாராளமாக கேள், தருகிறேன்.

அம்: நடராஜர் சிலை ஒன்று.

பர: வேண்டாம், தோழன் சிலையை செய்து செய்து மிகவும் களைத்துப் போயிருக்கிறான். வேண்டுமானால் நான் ஒரு பிள்ளையார் சிலைசெய்திருக்கிறேன். அதைத் தருகிறேன்.

சித்: நடராஜர் சிலைதானே? அவசியம் செய்து தருகிறேன். வருகிறேன் அம்மா.

## காட்சி 24

(அம்பிகா நரேந்திரனிடம்)

அம்: என்ன அவ்வளவு அவசரம். ஆட்டம் முடிந்து திரும்பி பார்க்குமுன் மாயமாய் மறைந்து விட்டீர்கள்.

நரே: ஏன்? அதனுல் என்ன குறைந்து விட்டது? உன் ஆட்டத்தை பிரமாதம் என்று புகழத்தான் ஆயிரம் பேர் இருக்கிருர்களே!

அம்: ஆயிரம் பேர் இருந்தாலும் புழக வேண்டியவர் புகழ்ந்தால் தானே இன்பம்.

நரே: அதற்குத்தான் ஆளேப்பிடித்து விட்டாயே.

அம்: என்ன விளேயாட்டு?

நரே: உன்னிடமும் அதைத்தான் நான் கேட்கிறேன். நீ தான் சபையிலேயே காட்டி விட்டாயே. அவன் புகழக் கேட்பதில் தானே உனக்கு தனி விருப்பம் இருந்தது.

அம்: சந்தேகம் இல்லே. நான் பெரிய பாக்கியசாலி.

நரே: ஏன்? உன்னிடம் பேசினுனே! அதைக் கொண்டு மகிழ்ச்சி என்கிருயா?

அம்: உங்கள் உள்ளத்திலே பொருமை ஏற்பட்டு விட்டதே அதைத்தான் என் பாக்கியம் என்கிறேன். ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்? தன் காதலனின் அன்புதான். எனக்கு தாங்கள் அன்பும் ஆதரவும் கிடைத்து விட்டது. எங்கே பொருமை அதிகமாக உண்டாகிறதோ அங்கே தான் அன்பு அதிகம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் என் மீது பூரணமாக அன்பு கொண்டு விட்டீர்கள். அதனுல் தான் நான் அடுத்தவருடன் பேசுவது கூட தாங்களுக்குப் பிடிக்கவில்லே.

## காட்சி 25

(மெய்க்காப்பாளர் மனேவி மங்களத்திடம்)

மெய்: மங்களம். அரசர் தம்மை மறந்து புகழும்போது நான் மெய் மறந்து விட்டேன்.

மங்: எல்லாம் அந்த தேவியின் கருணே.

மெய்: நம்ம பையன் இவ்வளவு பேரும் புகழும் பெறுவான் என்று நான் நினேக்கவே இல்லே. உம். அவனுக்கு காலாகாலத்தில் ஒரு கலியாணத்தை செய்து விட்டால்.

மங்: ஏன் தாத்தாவாக ஆசை வந்துருச்சா?

மெய்: நான் தாத்தாவானுல் நீயும் அவசியம் பாட்டியாகிவிடலாம். ஹீம் சின்ன வயசிலே இருந்த நாணம் சிரிப்பு வெட்கம் எல்லாம் அப்படியே இருக்கு.

மங்: பிள்ளேயில்லாதவன் வீட்டிலே கிழவன் துள்ளி விளேயாண்டான்னு சொல்றது சரியாத்தான் இருக்கு.

மெய்: ஹீம் நம்ம விசயம் இருக்கட்டும். பையன் மனதுக்கு பிடித்தமான பெண்ணு பார்க்கணும்.

மங்: எல்லாம் பார்த்து வச்சிருக்கேன். ரொம்ப அழகு. (தேவ சுந்தரி வர) அட அதோ அவளே வந்துட்டாளே! செல்லம் உனக்கு நூறு வயசு. என்ன அப்படி பார்க்கிறீங்க? கண்ணு பட்டுறப் போகுது.

மெய்: இல்ல எங்கயோ பார்த்த மாதிரி இருக்கேன்னு.

மங்: எங்கேயோ என்ன? இனிமே எப்பவுமே பார்க்கலாம்.

மெய்: சரி. அது ரொம்ப வெட்கப்படுது. நான் அரண்மனை வரை போயிட்டு வர்றேன்.

மங்: நீங்க இன்னைக்கி இவ்வளவு நேரம் அரண்மனையை மறந்து இங்கே தங்கினதே ஆச்சரியம்தான்.

(தேவசுந்தரியிடம செல்ல)

தேவ: அத்தை! நான் சமயம் தெரியாம வந்துட்டேன். என்னை மன்னிச்சிருங்க.

மங்: வாயாடி. என்ன சொன்ன? உங்க மாமனுரு இப்பத் தான் பையனுக்கு ஒரு நல்ல பெண்ணு பார்க்கணுமுன்னு சொல்லிக் கிட்டு இருந்தாரு நீயே வந்துட்ட.

தேவ: பெண்?

மங்: பெண்ணு இங்கேயே இருக்கா. அவ என்னை வேலை செய்யவே விடமாட்டா. ரொம்ப சமையலுல கெட்டிக்காரி. சமை யல் பண்ணுற கையை சுட்டுக்கிடுவா.

தேவ: அந்தப் பொண்ணு யாரு அத்தை?

மங்: நீயேதான்.

தேவ: போங்கத்தை.

மங்: உங்க கலியாணத்துக்கு பின்னுலயில நான் போகணும்.

தேவ: ஹீம். நான் மாட்டேன்.

மங்: என்னடி மாட்ட. எனக்கு மருமகளா ஆகமாட்டேங் கிறீயா?

தேவ: ஹீம் நான் சொல்ல மாட்டேன்.

## காட்சி 26

பரஞ்: அத்தை. இவனுக்கு இவ்வளவு பேரும் புகழும் யாரால் வந்துச்சுன்னு நினைக்கிறீங்க?

மங்: யாராலடா?

பரஞ்: அடியேன்.

சித்ர: ஆமா. உன்னுலதான். ஆனு என்னுல இவனுக்கு....

மங்: என்னடா......

சித்ர: உதை...அம்மா உதை......

மங்: என்னடா அப்படிச் சொல்ற?

பரஞ்: ஆமா அத்தை இவனோட சேர்ந்தா உதைதான கிடைக்கும். புதையலா கிடைக்கும்.

மங்: சரி சரி. சும்மா இருங்க. நான் உங்களுக்கு ஒரு முக்கியமான விசயம் சொல்லப் போறேன்.

பர: என்ன அத்தை என்கிட்ட சொல்லுங்க. டேய் காதை மூடிக்க.

சித்: என்கிட்ட சொல்லுங்க.

பர: என்கிட்ட சொல்லுங்க.

மங்: ரெண்டுபேருக்குமே சொல்றேன். எனக்கு ஒரு மருமக வரப்போறு.

பரஞ்: பலே...பலே. அத்தை! அவ யாரு? எங்க இருக்கா? எப்படி இருப்பா? வணங்காமுடியை வணங்க வைக்கிற பூங்கொடியா இருப்பாளா? இல்ல அடுப்பாங்கரையைக் காக்கிற பூனைக் குட்டியா இருப்பாளா?

சித்: எப்பவும் விளையாட்டுத் தானு?

மங்: என் மனசுக்கு பிடிச்ச பொண்ணு. ரொம்ப தங்கமான குணம். அவ வீட்டுக்கு வந்தா லெட்சுமி வந்த மாதிரி. என்னடா பேசாம இருக்க? ஹீம் சரின்னு சொல்லு. ஏன்டா அப்படி இருக்க.

சித்: ஒன்னு மில்ல.

பர: என்ன அத்தை இதை எல்லாம் அவன் கிட்டக் கேட்டுக்கிட்டு. அந்தக் காலத்திலே இதை எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் கலியாணம் பண்ணி வைப்பாங்களோ. என்னமோ மூக்கும் முழியுமா இருக்கிறதைப் பார்த்து கட்டி வைப்பீங்களா.

மங்: என்ன யோசிக்கிற உங்க அப்பாவும் சரின்னு சொல்லிட்டாரு.

சித்: அம்மா என்னை மன்னித்து விடுங்கள்.

மங்: என்னப்பா சொல்ற?

பரஞ்: என்ன அத்தை இத எல்லாம் அவன் கிட்ட கேட்டுக்கிட்டு. அவன் ராஜா மகள்தான் வேணும்பான். நாம சம்மதிச்சாலும் ராஜா சம்மதிக்க வேண்டாமா?

சித்: டேய் முட்டாள்.

பரஞ்: சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். அப்பா பீஷ்மா, பிரமச்சாரி. எல்லாம் எனக்கு தெரியும்டா.

மங்: உன் மனசில் உள்ளதை மறைக்காமல் சொல்லடா.

சித்: அம்மா எனக்கு கலியாணமே வேண்டாம்.

மங்: ஏன்டா பிள்ளைக்கு தாய் செய்ய வேண்டிய கடமையை நான் செய்ய வேண்டாமா? என்மடியிலே பேரப் பிள்ளைகள் விளையாடும் பெருமையை நான் அடைய வேண்டாமா?

சித்: அம்மா. உங்கள் வார்த்தையை இதுவரை நான் தட்டவில்லை. இனியும் தட்ட மாட்டேன். இந்த ஒரு விசயத்தில் மாத்திரம் என்னை தொந்தரவு செய்யாதீர்கள். உங்கள் வார்த்தையை மீறி நடந்ததாக சாபம் கொடுத்து விடாதீர்கள்.

## காட்சி 27

[பரஞ்சோதி தலை கீழாக நிற்க நீலவேணி வந்து]

நீல: யேய் என்ன தலைகீழா நிற்கிற?

பரஞ்: நேர நின்னே ஒன்னும் நடக்கல. அதனால தலைகீழா நின்னுவாவது நடக்குமான்னு பார்க்கிறேன்.

நீல: என்ன நடக்கணும்?

பர: நம்ம கலியாணம்.

நீல: நடத்திட்டாப் போச்சி.

பர: அது என்ன அப்படி லேசா சொல்லீட்ட? அட அது எப்படி நடந்துரும். ராஜகுமாரி அவனை சுத்துனாள். நான் உன்னை சுத்துனேன். அவன் என்னடான்னு கலியாணம் வேண்டாமுன்னுட்டானே.

நீல: ஐய்யோ!

பர: ஐயோவாவது கிய்யோவாவது. நாம மலைமேல ஏத்றதுக்குள்ளதான் அவன் கீழ இறங்கி வந்துட்டானே.

நீல: அவ்வளவுதான? சரி கேளு. (காதில் சொல்ல)

பர: யேய் எப்படி? எப்படி? (போக) யேய் நீலவேணி...நீலவேணி...நீ...ல...வேணி......

## காட்சி 28

[வள்ளி தெருவில் பாடிக்கொண்டு வருகிறாள்]

(பாட்டு)

வள்ளி: பச்சைமாலை...பவளமாலை பச்சை குத்தலையோ...குறி கேட்கலியோ......யேய் மச்சான் என்ன அங்க நிற்கிற? (நரேந்திரன் வர) ஏ சாமி...ஏ...சாமி...அட என்ன சாமி முறைக்கிற? ஏதோ பெரிய மனுசன்கிட்ட சின்ன வியாபாரம் பண்ணலாமுன்னு...நரி கொம்பு வேணுமா?

நரே: என்ன இது?

வள்ளி: அட ஆத்தே முறைச்சிக்கிடுரு. ஏ ஞ் சா மி நரி கொம்பு வேணுமா நரி கொம்பு......

ஒரு: யேய். அது யாரு தெரியுமா அவருதான் சேனதிபதி.

வள்ளி: என்ன? சேனயிபதியா.

ஒரு: அட சீ...

[பரஞ்சோதி கரும்புடன் வந்து தட்டிவிட]

வள்ளி: என்ன மச்சான் உழுந்துட்டயா எழுந்துரு. எழுந் துரு...யேய்...கரும்புகாரா...

பர: யேய் என்ன குறும்புக்காரியா இருக்கயே. என்னப் பார்த்தா கரும்பு விற்கிறவன் மாதிரியாவா தெரியுது?

வள்ளி: அட குடுயா வாங்க!

பர: கரும்பு வே ணு மா? மூஞ்சப்பாரு மூஞ்ச...யேய் தொடாதே தள்ளி நில்லு தள்ளி. ஆமா கரும்பு கொடுத்தா என்ன தர்ற?

வள்ளி: ஊசி தர்றேன் ஊசி...

பர: ஊசி கொடுக்கிறயா ஊசி அது கிடக்குது தூசி...

வள்ளி: அட குடுயா (பிடுங்க)

பர: யேய்...யேய்...

வள்ளி: அட என்ன சாமி கரும்பு உப்பு கரிக்குது?

பர: என்ன உப்பு கரிக்குதா உப்பு? வாய கொப்பளிச்சிட்டு சாப்பிட்டு பாரு. ஹீம் உப்பு கரிக்குதாம் உப்பு. யேய் இந்தா. ஊசி கொடு.

வள்ளி: என்ன சாமி, உப்பு கரிக்கிற கரும்பக் கொடுத்துட்டு ஊசி கேட்கிற?

பர: யேய் இந்தா இப்ப ஊசி கொடுக்கிறயா? இல்ல இந்த பாசியைக் கொடு.

வள்ளி: மச்சான்.

ஒரு: டேய் என்னடா போகமாட்ட?

பர: யேய்...இரு...இரு,...கரும்ப வாங்கி தின்னுபுட்டு ஊசி கேட்டா கொடுக்க மாட்டேங்கிரு அதை என்னன்னு நீ கேட்க மாட்டேங்கிற.

வள்ளி: யேய்...இங்க வா.

பர: யேய்...யேய்...இந்தா...இந்தா......

வள்ளி: சும்மா குந்திக்க சாமி...கைபார்க்கிறேன்.

## காட்சி 29

[தேவசுந்தரி மங்களம் இல்லம் வந்து]

தேவ: அத்தை...அத்தை...ஏன் அத்தை படுத்திருக்கீங்க?

மங்: ஒன்னு மில்லம்மா.

தேவ: அத்தை நீங்க இருங்க. எல்லா வேலையும் நான் கவனிக் கிறேன். நீங்க உட்காருங்க.

மங்: செல்லம்.

தேவ: ஏன் அத்தை ஒரு மாதிரியா இருக்கீங்க?

மங்: ஒன்னு மில்லே செல்லம்.

தேவ: அத்தை. ஒரு மாதிரியா இருக்கீங்களே. என்கிட்ட சொல்ல மாட்டீங்களா?

மங்: என்னம்மாம்மா சொல்வேன்.

தேவ: ஏன் அத்தை?

மங்: என் மகன் கலியாணமே வேண்டாமுன்னுட்டான்.

தேவ: அத்தை. அதைர்யப் படாதீங்க. நாளைக்கே அவர் மனம் மாறி உங்க இஷ்டம்போல நடக்கலாம். கவலைப் படாதீங்க. கவலைப் படாதீங்க அத்தை.

மங்: செல்லம்.

தேவ: அத்தை. அத்தை.

மங்: செல்லம்.

தேவ: அத்தை.

மங்: உன்னை நான் ஏமாற்றி விட்டேன். என் மகன்மேல் கொண்ட நம்பிக்கை வீணாகாது என்ற எண்ணத்தால் உன்னிடம் அப்படி கூறி விட்டேன். என் வார்த்தை பொய்யாகி விட்டது. நான் பெரிய தவறு செய்து விட்டேன், தவறு செய்து விட்டேன்.

தேவ: அத்தை. நீங்கள் ஒன்றும் தவறு செய்ய வில்லை. அவருக்கு பிடித்தமானவள் யாரென்று கேட்டு விடுங்கள். நான் வருகிறேன் அத்தை.

[அழுதுகொண்டு வர அங்கு வந்த சித்ரசேனன்]

சித்: பெண்ணே! யார் நீ? ஏன் அழுதுகொண் டிருக்கிறாய்?

தேவ: நான் அழுதால் உங்களுக்கு என்ன? என் கையை விடுங்கள்.

சித்: எனக் கென்னவா? என் வீட்டிற்கு வந்தபின் ஏன் அழ வேண்டும். அம்மா. யார் இவள்? ஏன் அழுதுகொண் டிருக்கிறாள்?

மங்: செல்லம்.

சித்: ஏனம்மா மௌனம்? சொல்லுங்கள்.

மங்: நான் என்னடா சொல்வது? தேடக் கிடைக்காத செல்வம் வாடிக் கிடப்பதை பாரடா! மகாலட்சுமி மாதிரி வந்திருக்கிருள். அவளை வேண்டாமென்று சொன்ன உன் இதயத்தைக் கேளடா அது சொல்லும்.

சித்: அம்மா! உங்கள் வார்த்தைக்கு என்ருவது மாறி நடந்ததுண்டா? என்னை மன்னித்து விடுங்கள்.

தேவ: அத்தை.

(இருவரும் மங்களம் காலில் விழுந்து நமஸ்கரிக்க)

மங்: என்றும் நீங்கள் நன்ருக வாழ வேண்டும். உலகம் உங்களைப் பார்த்து வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

## காட்சி 30

(நரேந்திரன் வந்து நீலவேணியிடம்)

நீல: யார்...யாரங்கே?

நரே: கொஞ்சம் விலகு. நான் இளவரசியைக் காணவேண்டும்.

நீல: கொஞ்சம் இருங்க நான் அம்மாகிட்ட கேட்டு வந்து சொல்றேன் உள்ள விடலாமான்னு.

நரே: தேவை யில்லை. நான் யார் தெரியுமா?

நீல: ஆறுவது சினமுன்னு ஒளவைப் பாட்டி சொல்லி யிருக்காங்க. கொஞ்சம் இருங்க (உள்ளே சென்று) அம்மா உங்களைப் பார்க்க தளபதி வந்திருக்காரு (அவளே) எனக்கு ரொம்ப தலை வலியா இருக்கு பார்க்க முடியாதுன்னு சொல்லடி (அவளே) சரியம்மா. (வெளியே வந்து) இளவரசியாரை இப்போ பார்க்க முடியாது. அவங்க ரொம்ப தலைவலியோட இருக்காங்க.

நரே: ரொம்ப தலைவலியோ?

(சித்ரசேனனும் தேவசுந்தரியும் பச்சை மலைச் சாரலில் ஆடிப் பாடுகின்றனர்)

(பாட்டு)

[பாடல் முடிய அங்கு நரேந்திரன் சேவகர்களுடன் வருகிருன்.)

நரே: துஷ்டனே! என்ன ஆணவமடா உனக்கு? மன்னர் மகளை வசப்படுத்திக் கொண்டால் மண்டலத்தை ஆளலாம் மகுடம் சூட்டிக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்தாயா? உன்னை என்ன செய்கிறேன் பார்.

தேவ: தளபதி!

சித்: ஆத்திரம் தீர்ந்ததா?

நரே: உன்னை துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும் என் ஆத்திரம் தீராது.

சித்: ஏன்! இறைச்சிக் கடை அனுபவமோ?

நரே: டேய். என்னை யாரென்று நினைத்து இப்படி பேசுகிருய்?

சித்: உன்னை மரியாதை தெரியாத முட்டாளாகத்தான் நினைக்கிறேன்.

நரே: டேய் இழுத்துச் செல்லுங்கள் இந்த துரோகியை.

தேவ: நில்லுங்கள். சேனுதிபதி! உனக்கு இங்கு என்ன வேலே. கோட்டையை காவல் செய். நாட்டைக் காத்திடு. படைகளுக்கு பயிற்சி கொடு. என் விசயத்தில் தலேயிடாதே.

நரே: மன்னிக்க வேண்டும் இளவரசி. மண்டலத்தை காப்பதுடன் மன்னர் பரம்பரைக்கு மாசு ஏற்படாமல் காப்பதும் என் கடமைதான்.

தேவ: நாட்டின் இளவரசி நான் உத்தரவிடுகிறேன். போய் விடு.

நரே: மன்னர் உத்தரவின் பேரில்தான் கைதி செய்ய வந்திருக்கிறேன்.

தேவ: சேனுதிபதி. என் தந்தையின் பெயரைச் சொல்லி நீ வாலே ஆட்டாதே. என் தந்தை என் எண்ணத்துக்கு மாருக என்றுமே நடக்க மாட்டார். நான் நாடாளப் பிறந்தவள். நான் கட்டளே யிடுகிறேன்.

மன்: ஆயிரம்தான் உள்ளத்திலே பாசம் இருந்தாலும் என் அரச பரம்பரைக்கு இழுக்குதேட எப்போதும் இடம் தரமாட்டேன். என்னுல் கூடுமானவரை கடமையை நிறைவேற்றியே தீருவேன்.

தேவ: அப்பா!

மன்: அப்பா! உன் தவறுக்கு வருந்தவேண்டிய நீயா சேனுதிபதியை எதிர்க்கிருய்? ஹீம் கைதி செய்யுங்கள் அவனே.

தேவ: அப்பா அவரை எதற்காக கைதி செய்ய வேண்டும்?

மன்: அவன் குற்றவாளி.

தேவ: அவர் ஒரு குற்றமும் செய்யவில்லே. அவர் குற்றவாளி என்ருல் நானும்தான் குற்றவாளி. அவருக்குத் தண்டனே தருவதாக இருந்தால் எனக்கும்தான் தண்டனே தரவேண்டும்.

சித்: மகிழ்ச்சி அரசே! நான் பாக்கியசாலி.

தேவ: அப்பா. தர்மத்தை அழிக்காதீர்கள். அப்பா! மன்னர் மகளாகப் பிறந்தவளுக்கு மனச்சாட்சி இல்லேயா? அவளுக்கு வாழும் உரிமைகூட கிடையாதா? அப்பா தாங்கள் அதிகாரத்துக்காக

அன்பை பலியிடப் போகிறீர்களா? சொல்லுங்களப்பா சொல்லுங்கள்.

மன்: உன் கண்ணீருக்காக நான் எதையும் செய்ய முடியாது. நான் உன் தந்தை என்ற முறையில் வரவில்லை. இந்த நாட்டின் மன்னர் என்ற முறையில் வந்திருக்கிறேன்.

தேவ: அப்பா...அப்பா...அவர் நிரபராதி.

[இழுத்துச் செல்கின்றனர்]

## காட்சி 32

மன்: நீ கலைஞன் கண்யமானவன் என்றுதான் நினைத்து வந்தேன். நீயோ திருடனைப் போல் நடந்து கொண்டு விட்டாய். துரோகம் செய்து விட்டாய். உனக்கு வேண்டியதைக் கொடுத்து விடுகிறேன். என் மகளின் வாழ்க்கையில் மட்டும் குறுக்கிடாதே.

சித்: அரசே! நான் ஏன் தாங்களுக்கு துரோகம் செய்ய வேண்டும்?

மன்: என் மகள் பட்டத்து இளவரசி. நீ அவள் மீது கொண்ட காதலை மறந்துவிடு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அரச பரம்பரை அடைந்து வரும் கௌரவத்தை பாழாக்கி விடாதே.

சித்: மலை வாசத்திலே நான் மாறாத காதல் கொண்டேன். மன்னர் மகள் என்றவுடன் காதலை மறக்க முயன்றேன். எனக்கு வெற்றி கிடைக்கவில்லை அரசே வெற்றி கிடைக்கவில்லை. என் உள்ளத்திலிருந்து காதலை பிரிக்க முடியவில்லை.

மன்: உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன் நீ அவளை மறந்துவிடு.

சித்: என்னையே நான் விலைக்காக விற்றுக்கொண்டாலும் என் இதயத்தையே விற்கும் சக்தி எனக்கில்லையே! ஏன் உங்கள் மகளிடமே சொல்லுங்களேன் என்னை மறந்துவிடும்படி.

மன்: அவள் அறியாப் பெண். அவள் மனதைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டோம் எனும் எண்ணத்தில் எதை வேண்டுமானாலும் பேசிவிடலாம் என்று எண்ணாதே. நான் நினைத்தால் அதிக நேரம் ஆகாது. என்னை எதிர்த்து உன்னால் உயிர்வாழ முடியுமா?

சித்: அதற்காக என்னிடம் இவ்வளவுதூரம் பேரம் பேச வேண்டியதில்லையே! என்னை ஆயிரம் ஈட்டிகொண்டு குத்தினாலும் சரி என்னால் அவளை மறக்க முடியாது. உங்களை எதிர்த்தால் நான் உயிர்வாழ முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் என்னைக் கண்டதுண்டமாக வெட்டிப் புதைத்தாலும் ஒவ்வொரு துண்டுகளிலும் அவள் உருவம்தான் பிரதிபலிக்கும்.

மன்: நிறுத்து. உன் காதலும் வைராக்யமும் என்னிடம் என்ன ஆகிறது என்று பார்க்கிறேன். டேய்! யாரங்கே? இவனை இழுத்துச் செல்லுங்கள்.

[அவன் தந்தையிடம்]

மன்: இத்தனை நாள் நான் செய்த நன்றிக்கு விசுவாசம் இது தானு? இதற்கெல்லாம் நீர் என்ன பதில் சொல்லப்போகிறீர்? ஆண்டாண்டு காலமாக நான் ஆதரித்ததற்கு இதுதானு நீர் செய்யும் கைமாறு? ஆயுட்காலம் பூராவும் நீர் எம் உடலைக் காத்தீர் உம் மகன் என் மானத்தையே அழிக்கக் காத்திருக்கிருன். இதுதானு நீர் செய்யும் நன்றி?

## காட்சி 33

மெய்: சித்ரசேனு!

சித்: அப்பா!

மெய்: நம் பரம்பரையிலே இதுவரை யாருமே அரசரிடம் சுடு சொல் கேட்டதில்லை. இன்று உன்னுல் அரசர் என்மேல் கொண்டிருந்த மரியாதையே போய்விட்டது. எதற்காக இந்த அவமானம்?

சித்: என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா.

மெய்: அரசரிடம் கேள் அந்த மன்னிப்பை.

சித்: என் மனம் அறிந்து நான் யாருக்கும் தீங்கு செய்ய வில்லை. உங்கள் மகன் யாருக்கும் தலை வணங்கமாட்டான்.

மெய்: தலை வணங்க வேண்டாம். இளவரசியை மறந்துவிடு.

சித்: என்னுல் அதுமட்டும் முடியாதப்பா.

மெய்: பெற்றவர்களை மறந்தாலும், காதலை மட்டும் மறக்க மாட்டேன் என்கிருயா?

சித்: அப்பா! என்மேல் ஆயிரம் ஈட்டிகளைக்கொண்டு தாக்கினுலும் நான் பொறுத்துக்கொள்வேன். ஆனுல் தாங்கள் கவலைப் படுவதைமட்டும் காணப் பொறுக்க மாட்டேன்.

மெய்: என் இதயம் அழுகிறது. மகன் சிறைப்பட்டுக் கிடப்பதைக் கண்டு எந்தத் தாய் தகப்பனுவது சந்தோஷமாய் இருக்க முடியுமா?

சித்: அப்பா! அரசரின் சதிக்கு நான் அழிகிறேன். இன்னலை அனுபவிக்கிறேன்.

மெய்: அப்பா! பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பது சரியாகத்தான் இருக்கிறது. உன்னை இந்த நிலையில் காணவா இவ்வளவு பிரியமாக வளர்த்தேன்.

சித்: அப்பா! தங்கள் வேதனையைப் பார்க்கும்போது என்னால் சகிக்க முடியவில்லை. என் நெஞ்சத்தில் ஏற்பட்ட காதலுக்காக என் உயிரையே பணயம் வைக்கத் துணிந்துவிட்டேன் அப்பா.

மெய்: மகனே... மகனே... நான் புத்திர சோகத்துக்கு ஆளாகத்தான் வேண்டுமா?

சித்: அப்பா! என்னை மன்னித்துவிடுங்கள்.

## காட்சி 34

[நரேந்திரனிடம் அம்பிகா]

அம்: உன் எண்ணம் ஈடேறிவிட்டதென்ற சந்தோஷமா? ஒன்றுபட்ட காதலைப் பிரிக்க முயல்வது மன்னிக்க முடியாத அவமானம். ஒன்றுபட்ட இரு உள்ளங்களைப் பிரிக்க உனக்கு என்ன உரிமை?

நரே: நான் நரேந்திரன். இந்த நாட்டின் சேனாதிபதி.

அம்: சேனாதிபதி...ஹும் நினைவிருக்கட்டும் குமுறும் எரிமலை என்றும் குமுறலோடு நின்றுவிடுவதில்லை. என்றாவது ஒருநாள் வெடித்தே தீரும்.

நரே: ஹும் அடுத்தவர்களைப்பற்றி உனக்கு என்ன அவ்வளவு அக்கறை?

அம்: ஒரு பெண்ணின் மனம் ஒரு பெண்ணிற்குத்தான் தெரியும். அந்த அபலை அழுத கண்ணீர் உன்னைச் சும்மா விடாது. அன்று சபையிலே பாஞ்சாலியைத் துகிலுரிந்தான் துச்சாதனன். பின் அழிந்தான் அவன். அவன் கதி நீயும் ஆகிவிடாதே.

நரே: எந்த நாடகத்துக்கு இந்த வசனம்?

அம்: அழிவு நாடகத்திற்கு நீ ஒரு அங்கம் ஆகாமல் தடுப்பதற்காக.

நரே: அம்பிகா! அந்தப் பயம் உனக்குத் தேவையில்லை. இந்த நரேந்திரனை அழிக்க இதுவரை எவரும் பிறந்ததுமில்லை. இனி பிறக்கப்போவதுமில்லை.

## காட்சி 35

[மெய்க்காப்பாளர் வர, மங்களம்]

மங்: சித்ரசேனன் எங்கே? என் மகன் எங்கே?

மெய்: உன் மகனா? எமனிடம் கேள். அவனுக்குத் தாய் தந்தையரைப்பற்றி யெல்லாம் கவலையில்லை. அவனுக்குக் காதல்தான் பெரிதாய்ப் போய்விட்டது. நம் குலத்தின் பெருமையையே சுட்டெரித்துவிட்டான். இதெல்லாம் நீ மூட்டிய நெருப்பு.

மங்: என்ன சொல்கிறீர்கள்?

மெய்: உனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பதையே மறந்துவிடச் சொன்னேன்.

மங்: பெற்ற மகனை மறப்பதா? பெற்ற குழந்தையை மறந்துவிட்டு எப்படி வாழ்வது?

மெய்: பெற்றவர்களைவிட காதல்தான் அவனுக்குப் பெரிதாய் விட்டது. இதற்கெல்லாம் காரணம் நீதான். அவன் துள்ளித் திரியும் காலத்திலேயே அவனை அடக்கி வைத்திருந்தால் இப்படி ஆகியிருப்பானா? அவன் பெரியவனாகிப் பெயரும் புகழுடன் விளங்குவான் என்று செல்லம் கொடுத்தாய் அதனால்தான் இப்படி நிலை வந்தது.

மங்: நீங்களே இப்படிச் சொன்னால் நான் என்ன செய்வது?

மெய்: தெய்வம் நின்று கொல்லும் அரசன் அன்றே கொல்வான் என்ற நீதி நிலைத்துவிட்டது. புலம்பு... புலம்பு. அதுதான் நீ கண்ட பலன்.

மங்: அவனை ஒன்றும் சொல்லாதீர்கள். இவை எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம். அதற்கு ஒரு வழி சொல்லுங்கள் நான் என் மகனை இழக்க மாட்டேன். இந்த உலகமே எதிர்த்தாலும் நான் என் மகனைக் காப்பாற்றியே தீருவேன். என் மகனை காப்பாற்றியே தீருவேன். காப்பாற்றியே தீருவேன்.

## காட்சி 36

[ஆராய்ச்சி மணியை மங்களம் அடிக்க அனைவரும் கூட்டம் கூட்டமாக ஓடிவருகின்றனர்]

## காட்சி 37

(அவையில்)

ஒரு: அம்மா! உனக்கு என்ன குறை? மன்னரிடம் முறையிட்டாயா? நீதி கிடைக்க வில்லையா? எதற்காக மணியை அடித்தாய்? அவையை கூட்டினாய்?

மங்: பெரியவர்களே! என் பிள்ளை மேல் கொண்ட பாசத்தால் நான் பெரிய தவறைச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள், என் மகனை விட்டு விடுங்கள்.

நரே: மன்னனின் பெருமையை களங்கப் படுத்த வந்திருக்கிருய்.

மங்: என் மன வேதனையை கிளறுதீர்கள் எதையும் விசாரிக்காமல் பதில் உரைக்காதீர்கள்.

நரே: அவன் உன் மகனுகப் பிறந்ததே தவறு. பெரிய இடத்தில் சம்பந்தப் பட்டு மகுடத்தைக் கைப்பற்ற முயன்றது பெரும் தவறு. இப்போது அவனுக்காக அவையைக் கூட்டி பேச வந்திருப்பது மன்னிக்க முடியாத தவறு.

மங்: உண்மை தெரியாமல் பேசவேண்டாம். என் மனம் வேதனை அடைகிறது. பெற்ற மனம் வேதனையால் பேசுகிறது. பிறந்த மகன் மேல் கொண்ட பாசத்திற்காக பேச வந்திருக்கிருள் அவன் தாய்? என்மகன் என்ன கோட்டையேறி குதித்து வரவில்லை. இளவரசிதான் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். மறுத்த என் மகனையும் நான்தான் இணங்கச் செய்தேன். அவர்கள் இளவரசி என்பதற்காக அல்ல. அவர்கள் இளவரசி என்பதும் எனக்கு தெரியாது. அவர்கள் நல்ல குணத்திற்காகவே மணமுடிக்க தீர்மானித்தேன். இது குற்றம் என்ருல் என்னைத் தண்டியுங்கள். என் மகனை மன்னித்து விடுங்கள்.

நரே: அரசே. இது மூவருமே கூட்டாக சேர்ந்து செய்த சதி. இளவரசியை ஏமாற்றி இளமனதை கெடுத்து இவ்வளவு பெரிய அரசாங்கத்தை தன் வசப்படுத்த சூழ்ச்சி. இவர்களுக்கு அந்த தண்டனை போதாது இவர்கள் மூவருக்குமே கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்.

மன்: ஆம் எவ்வளவு பெரிய அக்ரமத்தை செய்திருக்கிருர்கள். இவர்களை கடுமையாகத்தான் தண்டிக்க வேண்டும்.

மங்: இவ்வளவு பெரிய அபவாதத்தை சுமற்றுதீர்கள்.

மன்: இல்லை, உள்ளதைத்தான் சொல்கிருேம். நீ இந்த அரசையே அவமதிக்கிருய்.

மங்: இல்லை நியாயத்தைதான் கேட்கிறேன். என் மகன் குற்றவாளி என்ருல் அந்த குற்றத்தில் இளவரசிக்கும் பங்கு உண்டு. என் மகனுக்கு தண்டனை என்ருல் இளவரசிக்கும் தண்டனை

கிடைக்க வேண்டியதுதானே நியாயம். நீங்கள் கொடுத்தது தான் தீர்ப்பு என்றால் இந்த அவைதான் எதற்கு இந்த ஆராய்ச்சி மணிதான் எதற்கு? சொல்லுங்கள்...சொல்லுங்கள். இங்கு ஒரு தாய் இருந்தால் என் குரல் கேட்டு பேசாமல் இருப்பார்களா? இளவரசிக்கும் ஒரு தாய் இருந்தால் இதைக் கேட்டு சும்மா இருப்பார்களா?

ஒரு: அரசே! அந்த தாய் பேசுவதிலும் நியாயம் உண்டு.

மற்: அரசே! ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்கு ஒப்பானது.

மூன்: இளவரசி தாங்கள் மகள் என்பதை மறந்து தீர்ப்பு கொடுங்கள்.

அனை: சொல்லுங்கள்...சொல்லுங்கள்.

மன்: (எழுந்து) குடிமக்களே! மகனை இழந்தோம் என்று தாய் கதறுகிறாள். நீதி கேட்டு கண்ணீர் வடிக்கிறாள். நீதியை விசாரிக்க வேண்டிய நான் குற்றவாளியாக கருதப் பட்டுவிட்டேன். பிரதிவாதியாகி விட்டேன். பிரதிவாதியாகிய நான் அமர்ந்து நீதியை நிலைநாட்டுவதென்பது முடியாத காரியம். அதோ தர்ம தேவதை அமர வேண்டிய இடம் காலியாக இருக்கிறது. இந்த வழக்கில் உங்களில் ஒருவர் அமர்ந்து நீதி கூறுங்கள். நியாயம் வழங்குங்கள். ஏன் தயக்கம். இங்கு அமரும் துணிவு யாருக்கும் இல்லையா? உங்களுக்கு துணிவு இல்லாவிடில் அந்த சித்ரசேனனையாவது அமரச் செய்யுங்கள்.

அனை: முடியாது. முடியாது.

மன்: ஏன்?

ஒரு: அதில் அமரும் உரிமை உங்களுக்குதான் உண்டு. ஆண்டாண்டு காலமாக அரசர்வழி வந்தவர்கள் அமரும் ஆசனம். அதில் சாதாரணமானவர்கள் அமர நாங்கள் சம்மதிக்க மாட்டோம்.

மன்: அப்படியானால் எனக்குப் பின்?

ஒரு: இளவரசி இருக்கிறார்கள்.

மன்: இளவரசிதானே எதிர்கால ராணி?

அனை: ஆம்......ஆம்......

மன்: உங்கள் இளவரசியை மணப்பவர்?

அனை: இந்நாட்டு மன்னராக வேண்டியவர்.

மன்: அப்படியானால் இவன் இளவரசியை காதலித்தது?

அனே: தகாது...தகாது...மன்னிக்க முடியாது மன்னிக்க முடியாது.

மன்: தாயே, இந்த அவையே உனக்கு முடிவு கூறிவிட்டது உனக்கு உன் மகன் பெரிது. எனக்கு இந்த அரியாசனத்தின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும்.

நரே: இந்த அரசையே கவிழ்க்க சதி செய்த இந்த சண்டாளர்களை சும்மா விடக்கூடாது. உயிரோடு விடக்கூடாது.

அனே: மரணதண்டனை கொடுக்க வேண்டும்... மரணதண்டனை கொடுக்க வேண்டும்.

மங்: என் மகனுக்கு மரணதண்டனையா? என் மகனுக்கு மரணதண்டனையா? ஐயா பெரியவர்களே, நான் அழுது புலம்புவதைக் கண்ட உங்களுக்கு என்மேல் கருணை பிறந்து எனக்காக வாதிட்டீர்கள். அரசர் சிம்மாசனத்தைக் காட்டி கேட்டதும் அவர் பக்கம் தலையாட்டி விட்டீர்கள். நீங்கள் பிள்ளைகுட்டிகளை பெற்றெடுக்கவில்லையா? பிள்ளைகளோடு பிறக்க வில்லையா? ஆராய்ச்சி மணி கேட்டு கன்றை கொன்ற குற்றத்திற்காக தன் மகனை தேர்காலால் ஏற்றி கொன்று நீதிகாத்த மனுநீதி சோழன். ஒரு புறாவின் உயிருக்காக தன் சதையையே அறுத்துக் கொடுத்து காப்பாற்றிய சிபிச்சக்ரவர்த்தி. ஒரு அபலையின் கண்ணீருக்காக தன் ஆவியையே போக்கிக் கொண்ட பாண்டிய மன்னன். செத்தும் கொடை கொடுத்த சீதக்காதி மரக்காயர். தன்னிடம் யாசகத்துக்கு வந்த புலவனிடம் தலையையே அறுக்க வாள் எடுத்துக் கொடுத்த குமணன் இவர்கள்போல் தாங்களிடமும் நியாயம் கேட்கிறேன். என் மகனை என்னுடன் அனுப்பி விடுங்கள். என் மகனை என்னுடன் அனுப்பி விடுங்கள்.

புல: அரசே! இந்த வழக்கைப்பற்றி எனக்குக் கொஞ்சம் பேச அனுமதி கொடுங்கள்.

மன்: சொல்லுங்கள் புலவரே.

புல: அரசே! காதல் என்பது இயற்கை. அது உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசம் கிடையாது. கால வித்தியாசத்தால் இருவரும் காதலித்துவிட்டனர். காதலித்தது இளவரசி என்பதற்காக அவர்களுக்கு மரணதண்டனை கொடுப்பது நியாயமல்ல. விடுதலை செய்துவிடுங்கள். மீண்டும் இதே தொடர்பு தொடராவண்ணம் இந்த மண்ணில் மிதிக்கக்கூடாது என்று நாடுகடத்திவிடுங்கள்.

மன்: போதுமக்களே! நீங்கள் எல்லோரும் இந்த முடிவை ஒப்புக்கொள்கிறீர்களா?

அனைவரும்: அதுதான் சரி!

மன்: தளபதியாரே! உடனே போய் அழைத்து வாரும்.

## காட்சி 38

[தேவசுந்தரி போக, நீலவேணி]

நீல: அம்மா!

தேவ: என்னை விடு! நான் உடனே போகவேண்டும். என் அன்பருக்கு என்ன கஷ்டம் நேர்ந்ததோ அதைக் காணவேண்டும்.

நீல: அம்மா! நீங்கள் போகவேண்டாம். இளவரசி! நீங்கள் போவதால் எந்தப் பலனும் ஏற்படாது.

## காட்சி 39

[சித்ரசேனனை சேவகர்கள் கைது செய்து அழைத்து வந்து நிறுத்தி விலஙகு கழட்டப்பட்டபோது]

மங்: மகனே! இனி நீ கைதியல்ல. உனக்குச் சிறையில்லை, சித்ரவதை இல்லை. நீ ஒரு சுதந்திர பறவை.

நரே: ஆனால் மறந்தும் இம்மண்ணை மிதிக்கக்கூடாது என்பது மன்றத்தின் கட்டளை.

சித்: அம்மா......

மங்: ஆம் மகனே, அதுதான் இந்த நீதிமன்றத்தின் கட்டளை.

சித்: கட்டளை! இந்தக் கட்டளையிலே நீதி எங்கே இருக்கிறது தாயே? நான் பிறந்த பொன்னாட்டை விட்டுப் போ என்று கூற இவர்கள் யார்? பொங்கி வரும் காவேரிப்புனல், ஊறிவரும் வைகை வளர்த்த என்னைப் போ என்று சொல்லும் உரம் படைத்தவர் யார்? சங்கத் தமிழ் முழக்கும் சிங்கத் திருநாட்டை விட்டு விரட்டுவதற்கு இவர்கள் யார்? பூமணக்கும் பொதியமலைத் தென்றல் என்னை மறுத்ததா? உடல் சிலிர்க்கும் குற்றாலத்து அருவி என்னை வெறுத்ததா? முட்செடியும் விஷப் பூண்டும் முளைப்பதற்கு அனுமதித்த தரைமகள் என்னை மட்டும் தாங்குவதற்கு மறுத்தாளா? உள்ளே பகைவைத்து உதட்டிலே தேன் பூசி வஞ்சம் தீர்க்கும் நஞ்சிலும் கொடியோர் சொன்ன வார்த்தைகள் எல்லாம் தீர்ப்பாகிவிடுமா? வானத்தை முட்

டும் மலை சரிந்தாலும், வையம் அதிரப் பாடும் கடல் எடுத்து விழுங்கினாலும் ஒப்பமாட்டேன். அன்று இமயத்தின் உச்சியில் கொடியேற்றச் சென்றான் ஒருவன். கடலுக்கு அப்பால் வெற்றித் தூண் நிறுத்தப் போனான் இன்னொருவன், கனகவிஜயர் தலை நொறுங்கக் கல்லேற்றி வந்தான் இன்னொருவன். கங்கைகொண்டான் கலிங்கத்துப் பரணி கண்டான் என்றெல்லாம் விருது கண்டார் என் முன்னோர். அவ் வழி வந்த நான் புகலிடம் தேடி ஓடுவதா? ஓட்டுவதற்கு ஒரு மன்றமா? சரித்திரம் கண்ட தமிழகம். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திய முன் தோன்றிய முது வையகம், பஞ்சமென்று வந்தவர்க்கெல்லாம் வாழ்வளித்த தமிழ்நிலம் தான் பெற்ற மகனை ஓட்டிவிட்டதென்ற அவமானத்தைச் செய்யாதீர்கள். என்னுடைய பச்சை ரத்தத்தை வேண்டுமானால் அள்ளிப் பருகுங்கள். என் தசையைத் துண்டு துண்டாக்கி நான் பிறந்த மண்ணோடு மண்ணாகப் புதைத்துவிடுங்கள். ஆனால் என் தாயகத்திலிருந்து மட்டும் என்னை விரட்டாதீர்கள்! விரட்டாதீர்கள்.

மங்: மகனே! உன் தாய் கேட்டுக்கொள்கிறேன். நீ போகத்தான் வேண்டும். செல்லுமிடமெல்லாம கொஞ்சும் தமிழும் கூடவே வரும்.

சித்: அம்மா! நீங்களும் என்னை விட்டு விலகிப் போகிறீர்களா?

மங்: இல்லையடா. பிள்ளை எவ்வளவு தூரத்திற்குப் போனாலும் பெற்ற பாசம் அவனைத் தொடர்ந்தே வரும். புறப்படு மகனே...... புறப்படு.

[மங்களம் அழுத கண்களுடன் புறப்படச் செய்கிறாள்]

## காட்சி 40

[சித்ரசேனனை நாடுகடத்துகின்றனர்]

## காட்சி 41

[தேவசுந்தரி, மன்னரை எதிர்க்கிறாள்]

## காட்சி 42

[மங்களம் சோகமாக இருக்க, பரஞ்சோதி வந்து]

பர: அத்தை... அத்தை... எழுந்திரிங்க. அத்தை எத்தனை நாளைக்குத்தான் சாப்பிடாமப் பட்டினியா இருப்பீங்க. கொஞ்சம் சாப்பிடுங்க.

மங்: என் மகன் எங்கே இருக்கானே. எப்படி இருக்கானே: என்ன என்ன கஷ்டம் எல்லாம் அனுபவிக்கிறானே.

பர: அத்தை நான் இருக்கிறபோது நீங்க கண்ணீர் விட லாமா? நான் இப்பவே போயி எங்க இருக்கான் எப்படி இருக்கான்னு பார்த்துட்டு வர்றேன்.

## காட்சி 43

[பரஞ்சோதி காமாட்சி கோயில் வந்து]

பர: அம்மா காமாட்சி! உன்னத்தான் நம்பிக்கிட்டு இருக் கேன்.

காமா: (ஒருவள்) யேய் என்ன சொன்ன?

பர: என்னைக் கைவிட்டுருதே.

காமா: யேய் என்ன சொன்ன?

பர: காமாட்சியைச் சொன்னேன்,

காமா: ஏன் சொன்ன?

பர: உனக்கென்ன?

காமா: நீ ஒரு மனுசனா?

பர: ஓ... உன் பேருதான் காமாட்சியாச்சே ஏன் காமாட்சி கோயிலுக்கு வந்த? ஒரு மீனாட்சி கோயிலுக்குப் போகப்படாது?

காமா: மச்சான் மச்சான்...

ஒரு: ஏன்டா! இதுக்குத்தான் கோயிலுக்கு வர்றீங்களா? பொளப்புக்கெட்ட பசங்களா. இப்படித்தான் அந்த சித்ரசேனன்பய ராஜா மகள சுத்திக்கிட்டுத் திரிஞ்சான் ஊரைவிட்டே போயிட் டான்.

காமா: என்ன பேச்சுங்க? ரெண்டு மொத்து மொத்துங்க.

[அவன் அடிக்க, பரஞ்சோதி ஓடிவர, வள்ளி குறுக்கிடுகிறாள்]

வள்: யேய்...

பர: அட நீயா...

வள்: அட நீயா... கையைக் காட்டுசாமி.

பர: ஆமா, அன்னைக்கிக் கலியாணமுன்னு சொன்ன, அவன் என்னடான்னு போயிட்டான்.

வள்: ஏஞ்சாமி! சுடுகாட்டுக்கே போயிட்டாரா?

பர: யேய் சும்மா இரு. உன் நாக்குல வசம்ப வச்சி தேய்க்க-

வள்: யேய் மச்சான்! கேட்டியா. எங்க போயிட்டான்?

பர: இந்த ஊரைவிட்டே போயிட்டான்.

வள்: மச்சான் இன்னம் கலியாணம் ஆகலியாம். ஊரை விட்டே போயிட்டதாம். சொண்டா கையைக் காட்டு... அட கையிலே ஒரே அழுக்கு... (காரித் துப்பி துடைக்க)

பர: இந்தா! நீ என்னதான் காரித் துப்பினாலும் எனக்குக் கவலே இல்ல. எனக்குக் காரியம்தான் பெரிசு.

வள்ளி: அந்த ஆளு...காட்டில......

பர: காட்டிலயா...

வள்ளி: சிங்கம் புலி கரடி...

பர: ஓ...

வள்ளி: அங்க போயி பாரு...

பர: சரி வர்றேன்.

வள்ளி: இந்தப் பக்கம்...

பர: இந்தப் பக்கம் வேண்டாம் இப்பத்தான் ஒருவன் உதைச்சிட்டுப் போறான் நான் இத்தப் பக்கமா போயிருறேன்.

## காட்சி 44

[சித்ரசேனன் காட்டில் அலேகிறான்]

## காட்சி 45

[ஒரு யானே மாலேயை கொண்டுவந்து சித்ரசேனன் கழுத்தில் அணிவிக்கிறது]

(அழைத்து செல்கின்றனர்)

## காட்சி 46

(கோட்டையில்)

ஒரு: ஆண்டவன் தந்த தலேவரே வருக. மலேபரசன்

அனே: வாழ்க.

ஒரு: மலேயரசன்

அனே: வாழ்க.

ஒரு: மலையரசன்

அனை: வாழ்க.

சித்: ஐயா பெரியவரே! இது என்ன? நான் எப்படி மன்னனாக முடியும்?

பெரி: ஐயா! மாண்டுபோன மலையரசருக்கு வாரிசு இல்லை. ஆதலால் சம்ரதாயப்படி யானை யாருக்கு மாலையிடுகிறதோ அவரே எங்கள் அரசர். இவர்களை காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு. அது ஆண்டவன் கட்டளை.

சித்: ஐயா எனக்கு இந்த பொறுப்பு வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள்.

பெரிய: தாங்கள் அப்படி சொல்லக் கூடாது. தலைவன் இல்லாமல் தவிக்கும் மக்களைப் பாருங்கள். அவர்களை காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு. இது எங்கள் இஷ்டம் இல்லை. ஆண்டவன் கட்டளை.

விஜய: என்னை முதலில் ஜெயித்து விட்டு அங்கே உட்கார். யானை மாலையிட்டால் என்ன ஆண்டவன் கட்டளை யிட்டால் என்ன? முதலில் என் வாளுக்கு பதில் சொல்லிவிட்டு பின் உட்காரு.

பெரி: விஜயதேவா. பரம்பரை பரம்ரையாக நடந்து வரும் பழக்கத்துக்கு இடையில் எதிர்ப்பாகாதே. சொல்வதைக் கேள்.

விஜய: அது முடியாது. அதிவீராதி வீரர்கள் அமர்ந்த ஆசனத்தில் ஒரு கோழை அமர நான் சம்மதிக்க மாட்டேன்.

சித்: கோழை!

[இருவரும் சண்டையிடுகின்றனர். சித்திரசேனன் ஜெயிக்கிறான்]

விஜ: தலைவா ... தலைவா ...

சித்: நான் தலைவன் இல்லை. எனக்கு இந்த பதவி தேவை இல்லை. இனி இந்த மக்களை நீயே காப்பாற்று. நான் வருகிறேன்.

விஜ: மன்னித்து விடுங்கள். இனி தாங்கள்தான் தலைவர். நான் தங்கள ஊழியன்.

## காட்சி 47

[பரஞ்சோதியிடம் சிலர்]

ஒரு: டேய் யார் நீ? எங்க போற?

பர: (செவிடன் போல்) நானு! சாப்பிட்டு பத்து நாளாச்சி.

மற்: டேய் காட்டுப் பூச்சி! நாங்க கேட்கிறதுக்கு ஒழுங்கா பதில் சொல். எங்கபோற?

பர: நான் எங்கம்மாவுக்கு ஒரே பிள்ளைதான்.

மூன்: சுத்த செவிடா இருக்கான்டா! நான் சொல்றது காதுல விழல?

பர: நீ என் கூட பிறந்தயா? உட்டனு......

ஒரு: டேய் நீயாரு? எங்கவந்த? எங்க போறேன்னு சொல்லு.

பர: இந்தக் கல்லைத் தூக்கி தலையில வச்சிக்கிடவா?

மற்: டேய் நீ என்ன? நாங்க என்ன கேட்டாலும் பயப்பட மாட்டேங்கிற? பயப்படு. நாங்க யாரு தெரியுமா? நாங்க எல்லாம் காட்டு மனுசங்க.

பர: அத அப்பவே சொல்லித் தொலைக்கக் கூடாது? கையை வலிக்கிதா? வைத்தியர் கிட்டப் போ.

ஒரு: டேய் டேய்.

பர: என்ன? என்னது?

ஒரு: டேய் இவன் செவிடன்டா. தலைவர் ஆசீர்வாதம் பண்ணுரு. இவனையும் அவர்கிட்ட அழைச்சிக்கிட்டு போவோம்.

பர: என்ன சோத்துக்கு அழைச்சிட்டு போக போறீங்களா? இதை அப்பவே சொல்லக் கூடாது? எல்லோரும் செவிடங்க போலிருக்கு.

ஒரு; டேய் அங்க தலைவர்கிட்ட மூக்கப் பிடிச்சி மரியாதையா இருக்கணும்.

பர: சரி குளிச்சிட்டே சாப்பிடுவோம்.

## காட்சி 48

[சித்ரசேனன் அனைவருக்கும் திருநீறிட பரஞ்சோதிக்கும் திருநீறு பூசி பின் பார்த்து]

சித்: பரஞ்சோதி!

பர: சித்ரசேனு!

சித்: பரஞ்சோதி!

பர: சித்ரசேனு!

சித்: நீ இங்கே எப்படி வந்தாய்? அம்மா சௌக்கியமா?

பர: அம்மா சௌக்கியமாய்தான் இருக்காங்க. இங்க எப்படி வந்த?

சித்: பிறந்த பொன்னாடு என்னை விரட்டியது. அடைக்கலமாக வந்த இந்த பவள நாடு என்னை தலைவனாக்கி விட்டது.

பர: இப்ப பூசு. நிறையா பூசு. நீ வணங்காமுடிதான்... வணங்காமுடி.

அனை: வாழ்க...

பர: வணங்காமுடி......

அனை: வாழ்க.

(நடனம் பாட்டு)

## காட்சி 49

[சித்ரசேனன் தாயின்சிலை அருகில்]

சித்: பரஞ்சோதி! இந்த உருவம் சரியாகவா இருக்கிறது? நானும் அம்மாவின் உருவத்தை சரியாக செதுக்க வேண்டும் என்று காலம் எல்லாம் முயற்சிக்கிறேன். என் முயற்சியில் தோல்விதான் கிட்டுகிறது.

பர: தோல்விதான் ஏற்படும். அவர்கள் முகத்தில் மிளிரும் அன்பு, கருணை, பாசம் இதை இந்த கல்லில் செதுக்க முடியுமா? நீ எதையும் செதுக்கலாம், உருவாக்கலாம். ஆனால் உன்னை உருவாக்கிய உன் தாயை உன்னால் உருவாக்க முடியுமா?

சித்: அம்மா! உங்கள் அருகிலே இருந்து உங்களுக்கு பணிவிடைசெய்யும் பாக்யத்தை நான் இழந்து விட்டேன். பரஞ்சோதி நான்தான் அம்மா அருகில் இருக்கும் பாக்யம் எனக்கு கிடைக்கவில்லை நீ யேன் வந்தாய்? நீபோ. அம்மாவிடம் நான் நல்ல இடத்தில் இருக்கிறேன் என்று சொல்லு போ.

பர: ஆமா. நானும் நல்ல செய்தி வந்து சொல்கிறேன் என்று சொல்லி விட்டுத்தான் வந்தேன். அம்மா எனக்காக காத்திருப்பாங்க. கவலைப்படாதீங்க.

## காட்சி 50

மன்: அமைச்சரே! இளவரசியின் திருமண விசயமாக நீங்கள் மகேந்திரபுரி செல்ல வேண்டும். மகேந்திரபுரி இளவரசர் புவனேஸ்வர பூபதிக்கு இளவரசியை திருமணம் செய்ய நிச்சயித்து வரவேண்டும்.

அமை: எல்லாம் தாங்கள் மனம் போலவே நடக்கும்.

மன்: ஹீம் நீரும்தான் இளவரசி தேவ சுந்தரியின் திருமணம் முடிந்தால் தான் என் மனம் நிம்மதி யடையும்.

நரே: மகேந்திர பூபதியின் உறவு கிடைத்தால் இளவரசி பாக்கியசாலிதான். ஆனுல்...

மன்: என்ன நரேந்திரரே?

நரே: மகாராஜா! அந்தக் கொடியவனை அன்றே வெட்டிப் புதைத்திருக்க வேண்டும். ஆனுல் விடுதலை செய்து விட்டீர்கள். ஆனுல் அவன் தாய் ஊரறிய அவை கூட்டி விசயத்தை பிரகடனப் படுத்தி விட்டாள்.

மன்: அதற் கென்ன இப்பொழுது?

நரே: மகேந்திரரின் முதியோர்களில் ஒருவர் தன் மனைவி யாரோ ஒருவரை பார்த்ததற்காக அவரை வெட்டி கொலை செய்து விட்டு மனைவியையும் விலக்கி வைத்து விட்டதாக கேள்வி.

மன்: நரேந்திரா!

நரே: ஆயாசமடைய வேண்டாம் அரசே. அவர்கள் இல்லா விட்டால் அங்க வங்க கலிங்க சேர சோழ பாண்டியர்களில் எவரே னும் இளவரசியை திருமணம் முடிக்காமலா போகிருர்கள்.

மன்: அவர்களுக்கு மட்டும் செய்தி எட்டி யிருக்காதா?

நரே: கவலைப்படாதீர்கள்! உங்கள் கண்ணில் கண்ணீர் வரும் போது என் உள்ளத்தில் உதிரம் சொட்டுகிறது.

மன்: என் நினைவின் பலன் இன்று இந்நிலை யாகிவிட்டது. அன்றே இளவரசியின் மனம் போல் நடந்திருக்கலாம்! தவறி விட் டேன்.

நரே: நடக்கக் கூடாதது நடந்து விட்டது. இனி அதையே எண்ணி வருந்தாதீர்கள். இளவரசி தகுதியான மணமகன் கிடைத்து அவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள். அதுவே என் நம்பிக்கை.

மன்: நரேந்திரா!

நரே: அரசே!

மன்: நரேந்திரா!

நரே: அரசே.

மன்: நரேந்திரா! இந்த அரசின் பெருமை உன் பெருமை யல்லவா?

நரே: இந்த உடலில் உயிர் உள்ளவரை உங்கள் பெருமையை காப்பாற்றுவேன்.

மன்: தேவசுந்தரியை நீயே மணந்து கொள்.

நரே: அரசே! இளவரசி...

மன்: இந்த மண்டலத்துக்கு நீயே மன்னனாகிவிடு.

நரே: அரசே! இது.

மன்: ஆம் இளவரசியை நீதான் காப்பாற்ற வேண்டும்.

நரே: அதுவே என் பாக்கியம்.

## காட்சி 51

தேவ: (தனியாக) நடக்காது. உங்கள் பகற்கனவு பலிக்காது. என் பிணத்துக்குத்தான் நீங்கள் மாலையிட முடியும்.

## காட்சி 52

நீல: அரசர் பிடிவாதமாகவே இருக்கிறார் எல்லாம் அந்த நரேந்திரன் செய்த வேலை.

மங்: என் மகன்தான் வாழவில்லை. அந்த இளவரசியைப் யாவது வாழ விட்டிருக்கக் கூடாதா?

பர: (வந்து) அத்தை...அத்தை...அத்தை...

மங்: பரஞ்சோதி!

பர: அத்தை.

மங்: பரஞ்சோதி! என் மகன் எப்படி இருக்கான். சௌக்கியமா இருக்கானா? எங்க இருக்கான்? எங்க இருக்கான்?

பர: அத்தை! உங்க மகன் சந்தோஷமா இருக்காரு. சதா சர்வகாலமும் உங்களயே நினைச்சிக்கிட்டு இருக்காரு. எனக்கு இங்க வர கொஞ்சம் கூட இஷ்டம் இல்ல. ஹீம் உள்ள வாங்க சொல்றேன். அத்தை பவள மலையின்னு கேள்விப்பட் டிருக்கீங்களா? அங்க அவரு தலைவனாகிட்டாரு. அவரு உத்தரவு இல்லாம அங்க இருந்து ஒரு கல்லுகாயி கூட கொண்டு போக முடியாது.

மங்: இப்பத்தான் என் மனம் நிம்மதியாச்சி. என் வயிற்றில பாலே வார்த்த. நான் இனி என் மகன எப்பக் காணப்போறேனோ.

பர: அத்தை...அத்தை...அத்தை...(நீலவேணியை) வாயைப் பாரு. அத்தை இது யாரு? இத ஏன் வீட்டுக்குள்ள விட்டீங்க?

மங்: அப்படி பேசாதே. இந்த பொண்ணுதான் பெற்ற மக மாதிரி என்னை காப்பாற்றுச்சி.

பர: பெத்த மக! ஒரு மருமக வந்தா உங்க மகன இந்த ஊரை விட்டே விரட்டிட்டா! இப்ப இந்த மக உங்களேயே விரட்டப்போரு

மங்: என்னப்பா இப்படி பேசுற?

நீல: அம்மா! இனிமே அண்ணனைப் பற்றி கவலைப் படாதீங்க. நான் வர்றேன்.

மங்: ஹீம். வீட்டு வேலையெல்லாம் அவதான் செய்யிரு பாவம்...

பர: என்ன வீட்டு வேலையெல்லாம் அவதான் செய்யிருளா? ஏன் அத்தை! சாம்பாரு எப்படி வைக்கிரு?

மங்: சரி நீ போயி சாப்பிடு.

பர: ஹீம்...

மங்: சாப்பிட வா...

பர: சாப்பாடா! உங்களப் பார்த்தவுடனே ஒரு வாரத்துக்கு பசி எடுக்குமா? அப்படிதான் பசி வந்தாலும் நசுக்கிப்புடுவேன் நசுக்கி. (போக)

மங்: என் மகன் சௌக்கியமா இருக்கான்.

## காட்சி 53

அம்: உன் எண்ணம் நிறைவேருது. மன்னன் மகளை உன்பக்கம் வசப்படுத்த நினைக்கிருயே? நீ என்னிடம் எத்தனை சத்தியங்கள் செய்தாய்? நான் உனக்கு தாசியாக மாட்டேன்.

நரே: சந்தோஷத்தில் சாதாரணமாக சொல்லும் வார்த்தை எல்லாம் சாதித்து காட்ட முடியுமா?

அம்: துரோகி! உனக்கு மனச் சாட்சியே இல்லையா? மாற்ருன் காதலி என்பது தெரிந்தும் மன்னர் மகளை மணந்து கொள்ள உனக்கு மனச் சாட்சி யில்லையா?

நரே: அதன் மூலம் நான் சந்தோஷம் அடைகிறேன். அதன் மூலம் பெருமை அடைகிறேன்.

அம்: சீ சண்டாளா!

நரே: அம்பிகா! நீ வீணுக என்னை கோபப் படுத்தாதே.

அம்: கோபப் படுத்துவதா? பழி தீர்க்கப் போகிறேன்.

நரே: ஆடல் அழகியே என் திருமண விழாவில் நீதான் ஆடப் போகிருய்.

அம்: ஆடப் போகிறேன்.

## காட்சி 54

[தேவசுந்தரியிடம் காவலாட்கள்]

ஒரு: மன்னிக்கணும். தாங்களே வெளியே அனுமதிக்க கூடாது என்பது உத்தரவு.

தேவ: யார் உத்தரவு.

ஒரு: அரசர் இட்ட கட்டளே.

## காட்சி 55

[தேவசுந்தரி வைரத்தை பொடி செய்கிருள்]

தேவ: என் வாழ்வின் கடைசி நாள். என் இன்னல்கல் இன்ருேடு தீரட்டும். எங்கள் தூய அன்பில் எழுந்த காதலே அந்தஸ்து பேதத்தைக் காட்டி பிரித்து விட்டார்கள். உம்மோடு வாழ இந்த உலகத்தில் இடம் கிடைக்கா விட்டாலும் அந்த அமர உலகத்திலாவது ஒன்ருக வாழலாம். (இறப்பை நாட முயல அம்பிகா தடுக்க)

அம்: இளவரசி! இளவரசி! தற்கொலே பாபம் என்பதை தாங்கள் அறியாததா?

தேவ: நான் ஏன் வாழ வேண்டும்? நீ ஏன் வந்தாய்? என் வாழ்வோடு நீயும் விளேயாடுகிருயா? வாழத்தான் இடமில்லே. எனக்கு சாவதற்கு கூட உரிமை இல்லேயா? நீயும் அவர்களுக்கு உடந்தையா?

அம்: நான் துரோகமா செய்கிறேன். இளவரசி தற்கொலேயை விடப் பெரிய பாபம் வேறில்லே. அந்தஸ்து பேதம் காட்டி உங்கள் காதலில் குறுக்கிட்டவர்களுக்கு—உங்கள் வாழ்வைப் பிரித்தவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டாமா?

தேவ: நிகழ்ந்த நிகழ்ச்சிகளேக் கண்டு நான் உறுதி குலேந்து போனேன். நான் எதற்காக வாழ வேண்டும்? காதலித்த கணவரை விட்டு மாற்ருனுக்கு மாலேயிட்டு எப்படிவாழ முடியும்?

அம்: நான் சொல்வதைக் கேளுங்கள் இளவரசி.

தேவ: உன் சத்திய உபதேசங்களைக் கேட்க எனக்கு நேரமில்லை. என்னைத் தனியே விட்டுப் போய்விடு.

அம்: என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களைச் சந்தேகித்தேன். என் வாழ்விற்கு நீங்கள் போட்டியாகிவிட்டதாக ஆத்திரப்பட்டேன். உங்களைக் கண்ட பிறகுதான் நான் உண்மையை அறிந்தேன். நான் தங்களைக் காப்பாற்றத் துணிந்துவிட்டேன் நான் சொல்வதைக் கேளுங்கள் இளவரசி... இளவரசி...

தேவ: அம்பிகா!

அம்: இளவரசி...... வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும், வஞ்சனையை வஞ்சனையால்தான் வெல்ல வேண்டும். நீங்கள் தப்பிச் செல்லுங்கள். நான் எப்படியும் சமாளித்துக்கொள்கிறேன்

தேவ: அம்பிகா! எனக்காக நீ துயரத்திற்கு ஆளாவதா? சொந்த மகளையே உயிரோடு துடிக்க வைத்தவர்கள் உன்னைச் சும்மா விடுவார்களா?

அம்: என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களுக்கு உதவும் பாக்கியம் கிடைத்ததே அதுவே போதும் போய்வாருங்கள்.

தேவ: நான் போய் வருகிறேன்.

அம்: (உடை மாற்றிய தேவசுந்தரியிடம்) இப்போது உங்கள் பெயர் அம்பிகா தெரிந்துகொள்ளுங்கள்.

[வெளியில் வரும்போது]

நீல: இளவரசி...

தேவ: இளவரசி உறங்கிக்கொண்டிருக்கிறாள். வா போகலாம்.

[இளவரசி சென்றபின், அம்பிகா வைரத்தூள்களை எடுத்துக் கொள்ள, மன்னர் வந்து]

அம்: வாருங்கள் மகாராஜா!

மன: அம்பிகா! இளவரசி எங்கே? தேவசுந்தரி... தேவசுந்தரி...

அம்: இளவரசி இங்கே இல்லை மகாராஜா.

மன்: இல்லையா? எங்கே போய்விட்டாள்.

அம்: போகவேண்டிய இடத்துக்குப் போய்விட்டார்கள்.

மன்: ஆ...! என்ன சொல்கிறாய்?

அம்: ஆம் அவர்களுக்குச் சமயம் சரியாகக் கிடைத்தது. அவர்கள் தன்னைத்தானே கடத்திக்கொண்டார்கள்.

மன்: புரியும்படி சொல். எங்கே என் மகள்? எங்கே? ஏன் மௌனம்? நன்றிகெட்டவளே! உண்மையைச் சொல்! இல்லை உயிர் போய்விடும்.

அம்: என் உயிரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் எது நியாயம் என்று நீங்களே சொல்லுங்கள். பணம், அந்தஸ்து, அதிகாரம் படைத்தவர்கள் என்பதற்காக, ஒன்றுபட்ட காதலரைப் பிரிப்பதுதானா நியாயம்?

நரே: அம்பிகா! அரசனரயே எதிர்க்கத் துணிந்துவிட்டாயா? துரோகி!

அம்: துரோகி! அதுவும் யார்?

நரே: யாரங்கே! இவளை இழுத்துச் சென்று சிறையிலடையுங்கள் (கைதி செய்கின்றனர்)

மன்: கறைபடாத என் வாழ்க்கைப் புகழில் கறைபடிந்துவிட்டது.

நரே: கவலைப்படாதீர்கள். இளவரசியார் சென்றது யாருக்கும் தெரிய வேண்டாம். அம்பிகாவின் இதயத்தைப் பிளந்து அந்த ரகசியத்தை அறிந்து வருகிறேன். எப்படியும் இளவரசியைக் கண்டு பிடித்துவிடுகிறேன்.

மன்: எங்கே இருந்தாலும் என் மகளைத் தேடிக் கொண்டு வந்துவிடு.

நரே: நான் வருகிறேன்.

## காட்சி 56

அம்பிகா: (வைரத் தூள்களைச் சாப்பிட்டு, தனக்குத்தானே) அம்பிகா! இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் வாழ்வு தீர்ந்துவிடும். ஹும் இந்நேரம் பிரிந்தவர்கள் கூடியிருப்பார்கள். அந்த அன்புத் தெய்வங்கள் ஒன்றுபட்டிருக்கும். அம்பிகா அந்தத் திருப்தி ஒன்றே உனக்குப் போதும் போதும் போதும்.

[கட்டவுட், இருவரும் இன்பப் பாடல் பாடுவதாகக் கற்பனை]

[பாட்டு]

[நரேந்திரன் வர]

அம்: வருவார் வருவார் என்று வழி பார்த்துக் காத்திருந்தேன். வந்துவிட்டார் என் காதலர்.

நரே: என்ன நாடகம்?

அம்: நாடகமே உலகம். கண்ணா! உலகம் என்ற கூத்து மேடையில் நீங்கள் நான், மனிதராகப் பிறந்த எவருமே நடிக்கத் தான் வேண்டும்.

நரே: என்ன பிதற்றுகிறாய்?

அம்: பிள்ளைகள் பிதற்றினால் மழலை. கவிஞன் பிதற்றினால் கவிதை. காதலன் பிதற்றினால் காதல்.

நரே: குடித்திருக்கிறாயா நீ?

அம்: ஆம் குடித்திருக்கிறேன். ஹீம் ஆண்டவனே குடித் திருக்கிறான். அவன் குடித்ததினால் வந்த கோளாறுதானே அழகான உலகத்தைப் படைத்துப் பாம்பையும் தேளையும் புலியையும் பூனை யும், அதோடு உன்னையும் படைத்திருக்கிறான்.

நரே: அம்பிகா! இளவரசி எங்கே இருக்கிறாள்?

அம்: இளவரசியா? சொர்க்கலோகத்தி லிருப்பார்கள்.

நரே: உண்மையைக் கூறிவிடு. இல்லையேல் உன்னையும் அதே சொர்க்கத்துக்கே அனுப்பிவிடுவேன்.

அம்: நீ அனுப்ப வேண்டியதில்லை. அந்தச் சொர்க்கத்துக் காகவே நான் பிறந்திருக்கிறேன். நீ அங்கே வரமுடியாதே என்று தான் கவலைப்படுகிறேன். ஹீம் நான் மட்டும் எப்படிப் போவேன். என்னுடன் வந்தால் நீயும் வரலாம். நான் போகும் உலகத்துக்கு நீயும் வரவேண்டாமா? நான் உன்னைக் கொன்றுவிடுகிறேன். (மடிகிறாள் அம்பிகா)

## காட்சி 57

[நரேந்திரன், மங்களம் இல்லம் வந்து]

நரே: யாரங்கே? யாரங்கே?

மங்: யாரது? ஆ...! நீங்களா? வாருங்கள். வாருங்கள்.

நரே: உபசாரம் போதும் இளவரசி எங்கே?

மங்: என்ன இளவரசி இல்லையா? எங்கே போனார்கள்?

நரே: அதைத் தெரிந்துகொள்ளத்தான் இங்கே வந்தேன்.

மங்: இங்கே வரவில்லையே?

நரே: எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?

மங்: இளவரசி என்ன பதுமையா நான் மறைத்து வைக்க?

நரே: பதுமையல்ல பாவை. அதனுல்தான் உன் இஷ்டம் போல் ஆட்டிவைக்க முடிகிறது.

மங்: ஏன் என் மகனே வதைத்தது போதாதென்று இளவரசி யையுமா வதைக்க வேண்டும். என் மகனுக்கு இழைத்த கொடுமை களால் அவன் பவளமலேயிலே கிடக்கிருன். நாங்கள் அவனேக் காண முடியாமல் ஏங்குகிருேம். எங்களுக்கு இவ்வளவுகொடுமை இழைத்து நீ என்ன பலனேக் காணப்போகிருய்?

நரே: மூடு வாயை... பவளமலே...

[போக]

மங்: ஐயோ ஆத்திரத்தில் அவன் இருக்கும் இடத்தைச் சொல்லிவிட்டேனே. என் மகனுக்கு என்ன ஆபத்து வருமோ?

பா: அத்தை! நீங்க வருத்தப்படாதீங்க, நம்ம சித்ரசேன னுக்கு ஒரு ஆபத்தும் வராது, இவங்க மட்டும் பவளமலேக்குப் போகட்டும் இவங்க எலும்பு ஒவ்வொண்ணேயும் ஒவ்வொரு சிலேயா செய்துருவாங்க.

## காட்சி 58

[நரேந்திரன் பவள மலேக்குச் சென்று]

நரே: யார் சித்ரசேனனு?

ஒரு: ஹீம் தலேவர். மண்டியிட்டு வணங்கு.

சித்: தளபதியாரே! தாங்கள் ஏது இவ்வளவு தூரம் வரக் கார ணம்?

நரே: இளவரசி எங்கோ மறைந்து விட்டார்கள். அவர்களே தேடிக் கண்டுபிடிக்கவே வந்தேன். கவலேப்படாதீர்கள். அவர்கள் எங்கிருந்தாலும் தேடிக்கண்டு பிடித்து இங்கு கொண்டுவந்து சேர்க் கிறேன்.

சித்: நரேந்திரா! பரிதாபப்படுகிறேன்.

நரே: தலேவா! நான் தங்கள் எதிரியல்ல. தங்களுக்கு பணி செய்து கிடப்பதே என்கடன்.

சித்: என்ன?

நரே; உமது ஆட்கள்....

சித்: பயப்படாதே! ஒன்றும் செய்ய மாட்டார்கள். விஜய தேவா! இவர்களை மரியாதையுடன் வழியனுப்பு. (போனபின்) விஜயதேவா! சேனதிபதி ஒரு விஷப்பாம்பு. ஏதோ ஆபத்துக்கு அஸ்திவாரமிட திட்ட மிட்டிருக்கிருன். ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

## காட்சி 59

மன்: என்ன நடந்தது நரேந்திரரே?

நரே: எப்படிச் சொல்வேன்? என் ரெத்தம் கொதிக்கிறது.

மன்: என்ன?

நரே: இவர் மகன். அந்த துஷ்டன். நம் நாட்டை எதிர்த்து படை திரட்டுகிருன். அவனை அங்கேயே தொலைத்து இருப்பேன். இளவரசிக்கு ஏதும் ஆபத்து வரக்கூடாது என்றுதான் விட்டு வந்தேன்.

மன்: சரி படை புறப்படட்டும் நானே போகிறேன்.

நரே: மகாராஜா! சிங்கம் ஓநாயுடன் சண்டைக்கு போவதா? வேண்டாம்.

மன்: உம் மகனல் என் மானமே போய்விட்டது. இனி நான் ஏன் இருக்க வேண்டும்? நானே போகிறேன்.

மெய்: அரசே! எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே?

நரே: எப்படி விளங்கும். தகப்பனும் மகனும் சேர்ந்து இந்த நாட்டை ஆளவேண்டும் என்ற பேராசை. தகப்பன் இங்கே மன்னருக்கு மெய்காப்பாளர். மகனே மன்னரை எதிர்த்து படைதிரட்டுகிருன்.

மெய்: சேனதிபதி! ராஜ சேவைக்காகவே வாழ்ந்தவர்கள் என் முன்னேர்கள். நான் ராஜ பக்திக்காகவே வாழ்கிறேன். உத்தரவு கொடுங்கள். என் மகனை நானே கைதி செய்து கொண்டுவருகிறேன்.

நரே: மகன் என்ற பாசம் குறுக்கிட்டால்?

மெய்: களத்திலே உறவில்லை சுத்த வீரனுக்கு.

நரே: தவறினல்?

மெய்: என் தலை வணங்கும்.

நரே: தப்பித்துக் கொள்ளும் தந்திரம் இல்லையே?

மெய்: சேனாதிபதி!

மன்: உம்மை நம்புகிறேன். தக்க படையுடன் புறப்படும்.

மெய்: உத்தரவு.

## காட்சி 60

பர: அத்தை! இந்த அக்ரமத்தை பார்த்தீங்களா? மாமாவே படை திரட்டிக்கிட்டு புறப்பட்டுட்டாரு மகனை கைதி செய்ய.

மங்: என்னடா சொல்ற?

பர: நீங்க எந்த மகனை நினைச்சி நினைச்சி உருகிக்கிட்டு இருக்கிங்களோ அந்த மகனையே கைதி செய்யப் புறப்பட்டுட்டாரு.

மங்: அட தெய்வமே! மகனை கைதி செய்யவா? ஐயோ... ஐயோ...

## காட்சி 61

[மன்னர் படையை மெய்காப்பாளர் தலைமை தாங்கி நடத்தி சென்று பவளமலையை முற்றுகையிட]

ஒரு: ஐயா சண்டை போட முடியாதுங்க.

மற்: பீரங்கி எல்லாம் கொண்டு வந்திருக்காங்கய்யா.

விஜய: பயப்படாதீர்கள். பாறைகளை உருட்டி தள்ளுங்கள், நசுக்கி எறியுங்கள்.

[சண்டை நடக்கிறது. பாறைகள் உருட்ட சிரமப்பட்ட மெய் காப்பாளர் ஆட்கள்]

ஒரு: நம் வீரர்கள் அனைவரும் அடிபடுகின்றனர்.

மற்: கோட்டை மேல் போக முடியாது.

மெய்: பீரங்கியால் நாலா பக்கமும் சுட்டுத் தள்ளுங்கள்.

(சித்ரசேனனிடம்)

ஒரு: வெடி குண்டால் மலையையே பெயர்த்தெறிகிறார்கள்.

சித்: இரக்கமற்ற அரக்கர்கள் இதையும் செய்வார்கள் இன்னமும் செய்வார்கள். நானே போகிறேன்.

விஜ: தாங்கள்தான் போக வேண்டுமா?

சித்: எனக்காக ரத்த ஆறு ஓடவேண்டுமா?

விஜ: மரணத்திற்கு பயப்படுபவர்கள் நாங்கள் அல்ல. என்று வது ஒருநாள் இந்த உயிர் போகத்தான் வேண்டும். அந்த உயிர் இன்றே போகட்டும்.

[யுத்தம் நடைபெறுகிறது]

மெய்: ஹீம் சுடு...சுடு...சுடு.

[பரஞ்சோதியும் மங்களமும் வந்து]

பர: அத்தை! போகாதீர்கள் அத்தை போகாதீர்கள்.

மங்: மகனே...மகனே...மகனே.

பர: அத்தை...அத்தை...அத்தை.

மங். மகனே...மகனே......

[மங்களம் காயமடைகிறுள்]

பர: மாமா அநியாயமா அத்தையை கொன்னுட்டீங்களே.

மெய்: ஹா...மங்களம்.

[சித்ரசேனன் தாயைக் கண்டு]

சித்: அம்மா...அம்மா...

மங்: மகனே...மகனே...

சித்: ஐயோ...அம்மா...அம்மா...அம்மா...அம்மா...அம்மா... ஏனம்மா இங்கே வந்தீர்கள் காலமெல்லாம் எனக்காக பட்ட கஷ்டம் போதாதா? இப்போதும் இங்கே வந்தா மடிய வேண்டும்? பாவிகளே! என்தாயை கொன்று விட்டீர்களே. உங்களை தவிடு பொடி யாக்குகிறேன்.

மங்: மகனே! மகனே...

மெய்: மங்களம்...மங்களம்...

சித்: கட்டிய மனைவியைக் கொன்ற பழிகாரரே! இதோ பெற்ற மகன் நான் இருக்கிறேன். என்னையும் கொன்றுவிடும். அப்போதுதான் உன் அரசன் ஆனந்தப் படுவான். ஹீம் கொன்று விடும்.

மங்: பெற்ற நாள் முதல் என் சொல்லைத் தட்டாத நீ இப்போது நீயா இப்படி பேசுகிருய். எனக்கு சாகும்போதுமா இந்த வேதனை?

சித்: அம்மா...அம்மா...அம்மா...

மங்: மகனே...

மெய்: மங்களம் உன் முடிவு....

சித்: அம்மா தாங்கள் மகன் சாகக் கூடாது என்பதற்காக உங்கள் உயிரையே அர்ப்பணித்து விட்டீர்களே அம்மா.

மங்: அப்பா மகனே! இளவரசி உன்னோடுதான் இருக்கிறாளா?

சித்: இல்லையம்மா. இல்லையம்மா.

மங்: நீ அவளை பார்க்கவே இல்லையா?

சித்: இல்லையம்மா. பச்சமலைச் சாரலில் நான் கைதி செய்யப்பட்டபிறகு இன்றுவரை நான் பார்க்கவே இல்லையம்மா.

மங்: உண்மையாகவா?

சித்: உங்கள் மேல் சத்தியமாக.

மங்: பார்த்தீர்களா? என் மகன் நிரபராதி. என் மகன் நிரபராதி. குற்றமற்றவன். என் கண்மணியை உங்களிடம் ஒப்படைக்கிறேன்..அவனுக்கு ஒரு குறைவும் இல்லாமல் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு.

மெய்: மங்களம்! என் உடலில் உயிர் இருக்கும்வரை அவனுக்கு ஒரு குறைவும் நேராமல் நான் காப்பாற்றுவேன். மங்களம்...

சித்: அம்மா!

பர: அத்தை!

சித்: அம்மா...அம்மா...

மங்: மகனே...மகனே...

சித்: அம்மா...அம்மா...

மெய்: மங்களம்!

பர: அத்தை!

சித்: அம்மா...அம்மா...

[மடிகிறாள்]

## காட்சி 62

[மங்களம் உடல் சிதையில் எரிகிறது]

(பாட்டு)

[மெய்காப்பாளர் தன் மகனை கைதி செய்கிறார்]

## காட்சி 63

மன்: என் மகள் எங்கே? இளவரசி எங்கே? ஏன் மௌனம்? சொல், சொல்.

மெய்: அரசே...என் மகனுக்கு இளவரசியைப் பற்றி ஒன்றுமே தெரியாது.

நரே: பெரிய சூழ்ச்சி நடந்திருக்கிறது.

மன்: என் மகளை என்னிடம் ஒப்படைத்துவிடு. உமக்கு மன்னிப்பு கிடைக்கும்.

சித்: மன்னிப்பு யாருக்கு. நான் நாடு கடத்தப் பட்டவன். இந்த நாட்டு பிரஜை எனும் உரிமை யற்றவன். என்னை மன்னிக்கும் உரிமை உமக்கு என்ன இருக்கிறது.

நரே: குற்றவாளியாக இருப்பதால்தான் கைதியாக வந்திருக்கிருன்.

சித்: இல்லை. தவறு.

நரே: அரசாங்க விருந்தாளியாக வந்தாயோ?

சித்: என் அன்னை சாகும்போது கேட்டுக் கொண்ட அந்த அன்பு தெய்வத்தின் கட்டளைக்காக வந்தேன். என் தந்தையின் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்தேன்.

மன்: போதும் நிறுத்து.

நரே: சித்ரசேன உண்மையைச் சொல்.

சித்: என்னைக் கேள்வி கேட்க நீயார் என்பதை முதலில் சொல்.

மெய்: மகனே! உன் தாயின்மேல் ஆணையிட்டுச் சொல்.

சித்: என் தாயின்மேல் ஆணையாக. என் தகப்பன்மேல் ஆணையாக. தகப்பனுக்கும் மகனுக்கும் மோதல் ஏற்படக் கூடாது என்று உயிர் விட்ட என் தாயின்மேல் ஆணையாகச் சொல்கிறேன். நான் இளவரசியைப் பார்க்கவே யில்லை.

மெய்: அரசே! என் மகன் நிரபராதி. எந்த குற்றமும் செய்யாதவன். மன்னன் மகளே காதலித்ததற்காக நாடு கடத்தப்பட்டான். தாயைப் பறிகொடுத்தான். தந்தையின் கையாலயே கைதியாக்கப்பட் டிருக்கிருன். அவனை விட்டு விடுங்கள்.

நரே: தெரிந்தும் தெரியாததுபோல் பாவனை செய்கிருர் மெய்காப்பாளர் இளவரசியை மலைக் குகையில் மறைத்து வைத்

திருப்பதை பார்த்து இருக்கிறார். பின் மகன் என்ற காரணத்திற்காக மறைக்கிறார். குற்ற முள்ளவன் என்ற காரணத்தினால் தான் அவனை கொண்டு வந்து சேர்த்தது.

மெய்: மறைப்பதா! அரசே! தாங்கள் கால்களைப் பிடித்து கேட்கிறேன். தாங்கள் கட்டளைக்காகவே அவனை கைதி செய்து கொண்டு வந்தேன். அவன் நிரபராதி. மகன்மேல் கொண்ட பாசத்தால் தான் விட்டு விடுங்கள் என்று மன்றாடுகிறேன். அவன் குற்றவாளியில்லை. நிரபராதியை கைதி செய்துவந்த நான்தான் குற்றவாளி. வேண்டுமானால் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்.

நரே: ஆகா உருக்கமான பேச்சுக்கள். இதுக்காகவாவது உம் மகனை விடுதலை செய்ய வேண்டியது தான்.

மன்: விடுவிப்பதா? என் மகளை இழந்து என் மனம் துடிப்பதை யாரிடம் சொல்ல முடியும். என் மனம் என்ன பாடுபடும்.

நரே: இவர்கள் இருவருமே பெரிய சதிகாரர்கள்.

மெய்: நரேந்திரா! வால் நிமிர்ந்தால் சிறு பூனை புலியாகி விடாது. எல்லாம் உன்னால்தான் முடியும் என்று நினைத்து விடாதே. நான் நினைத்தால் ஒரு நொடியில் தலை போய்விடும்.

[நரேந்திரன் அடிக்க]

சித்: பரிசு...பரிசு...தகுந்த பரிசு. என் காதலைக் கெடுத்தீர் பொறுத்துக் கொண்டேன். என் தாயைக் கொல்ல சதி செய்தீர் அதையும் பொறுத்துக் கொண்டேன். என் கையில் விலங்கிடச் செய்தீர் அதையும் பொறுத்துக் கொண்டேன். ஆனால் என் தந்தைக்கு அவமானம் நேர நான் பொறுக்க மாட்டேன். இந்த தண்டனைக்கு பதில் தண்டனை நான் கொடுக்கிறேன். (நரேந்திரனை அடிக்க அனைவரும் சேர்ந்து கைதி செய்து)

சித்: என் ஆவேசத்தை நீங்கள் ஆயுதங்களைக் காட்டி தடுத்து விட முடியாது. நீங்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு ஒரு நாள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

நரே: ஹீம் கைதி செய்யுங்கள்.

மன்: நாளை சூர்யோதயத்துக்கு முன் இவனை சிரச்சேதம் செய்ய உத்தர விடுகிறேன்.

மெய்: அநியாயம் அநியாயம். இந்த அநியாயத்தை என்னால் பொறுக்க முடியாது. அவனை விட்டு விடுங்கள். என்னைக் கொன்று விடுங்கள்.

மன்: ஹீம். அவனுடன் சேர்ந்து நீயும் செத்து விடு.

நரே: ஹீம் இழுத்துச் செல்லுங்கள் இத்த நாய்களை,

## காட்சி 64

[நீலவேணி தேவசுந்தரி இருவரும் நடந்து வருகின்றனர்.]

## காட்சி 65

[வள்ளியிடம்]

வள்: அட ஏன்சாமி மறைக்கிற? ஏ...மச்சான்...

சேனு: ஹீம் பிடி இந்த திருடியை (கைதி செய்யப்படு கிருள்)

## காட்சி 66

நரே: குற்றம் செய்தவன் அவன். மன்னர் உங்களை ஒன்றும் சொல்ல மாட்டார் என்று சொல்லி அழைத்து வந்திருக்கிறேன். வாருங்கள்.

[வள்ளி தேவ சுந்தரிபோல் ஜோடிக்கப் பட்டிருக்கிருள்]

நரே: இளவரசி! மகாராஜா வந்திருக்கிருர்.

மன்: தேவசுந்தரி...தேவசுந்தரி ஏன் பேசாமல் இருக்கிருய்?

நரே: இன்னும் பயம் தீரவில்லை அரசே.

மன்: என்னை அன்புடன் பாரம்மா.

நரே: எல்லாம் போகப் போக சரியாய் போய்விடும்.

வள்ளி: என்ன என்ன?

மன்: பயப்படாதம்மா. பயப்படாதே. நாளைக்கே உனக்கு திருமணம் செய்ய நிச்சயித்திருக்கிறேன்.

நரே: மறுக்க மாட்டார்கள். எல்லாம் உங்கள் மனம் போலவே நடக்கும். (போனபின்) ஹீம் பிரமாதமாக நடித்து விட்டாய்.

வள்ளி: என்னை விட்டுரு நான் போகிறேன்.

நரே: பைத்தியம் எங்கே போகப் போகிருய்?

வள்: நான் பட்டி தொட்டி எங்கயாவது சுத்துவேன்.

நரே: இந்தா உன்னை அரண்மனைக்கே ராணியாக்குகிறேன்.

வள்: எனக்கு வேண்டாம். என் மச்சான் கண்டா கொண்ணுடு வான்.

நரே: இந்தா! சத்தம் போடாதே. நாளைக்கு உனக்கு கலி யாணம்.

வள்: ஐயயோ. கலியாணமா எனக்கு வேண்டாம். என் மச் சான் மேல எனக்கு கொள்ளை ஆசை.

நரே: யேய். வாயை மூடு. நான் சொல்வதைக் கேள். கேட் காவிட்டால்...ஜாக்கிரதை.

வள்: ஹீம்.

## காட்சி 67

ஒரு: தாயைவிட சிறந்த கோயில் இல்லேங்கிறது சரியாய் தான் இருக்கு.

மற்: அதைக் கண்ணாலயே பார்த்துட்டோம்.

மூன்: ஹீம் தாய் செத்து மறுநிமிஷமே கையில விலங்கப் போட்டுட்டாங்களே.

[தேவசுந்தரி நீலவேணி வர]

ஒரு: யாரம்மா நீங்க.

தேவ: இவங்கள இந்த முடிவுக்கு கொண்டுவந்த பாதகி நான் தான்.

நீல: இவங்கதான் இளவரசி.

விஜ: ஆ...இளவரசி.

[பரஞ்சோதி வந்து]

பர: வாங்க... வாங்க. யாரு இளவரசியா! எங்க வந்தீங்க. அவரை இந்த நிலமைக்குக் கொண்டு வந்தது போதாதா? அத் தையை அநியாயமாக் கொன்னுட்டீங்களே அது போதாதா? இப்ப ரெண்டு பேரும் அப்பனும் மகனும் தூக்கில நிற்கிற நிலமைக்குக் கொண்டு வந்துட்டீங்க. நீங்க செய்ததுக்குப் பிரதி உபகாரமா இருக்கணுமுன்னு, இப்ப உடனே என் தோழனைக் காப்பாற்றுங்க... வாங்க... வாங்க. எல்லோரும் வாங்க...

## காட்சி 68

[தூக்குமேடை செல்ல]

மெய்: மகனே! நாம் பரம்பரையாகவே ராஜ குடும்பத்திற் காகவே உழைத்தோம் இன்று ராஜகுடும்பத்திற்காகவே அழிகிறோம்.

சித்: அப்பா! என்னை அன்புடன் வளர்த்த தாயைப் பறி கொடுத்தது போதாது என்று தாங்கள் மடிவதையும் நான் என் கண்ணுல் காணவேண்டுமா? முடியாது! அப்பா! நான் முதலில் மடிகிறேன்.

மெய்: மகனே! மன்னருக்குக் கொடுத்த வாக்கை நான் காப்பாற்றிவிட்டேன். மனைவிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலையில் இருக்கிறேன். இந்நிலையில் நீ மடிவதை நான் என் கண்ணுல் காண முடியாது. நான் முன்னுல் சாகிறேன். அந்தத் திருப்தியாவது எனக்குக் கிடைக்கட்டும்.

## காட்சி 69

[வள்ளிக்கும் நரேந்திரனுக்கும் திருமணம் நடக்கும்போது]

ஒரு: கெட்டி மேளம்! கெட்டி மேளம்.

பர: (வந்து) நிறுத்துங்கள்!

மன்: என்ன?

பர: என் தோழன் நிரபராதி. அவரை விடுதலை செய்யுங்கள்.

நரே: விடுதலையா? இதற்குள் அவன் இந்த உலகத்தைவிட்டே விடுதலையாகி யிருப்பான்.

பர: இந்த உலகத்திலிருந்து விடுதலையாகப் போவது யார் என்பது இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரியப் போகிறது. மகாராஜா! அதோ வந்துவிட்டார்கள்! இதோ இளவரசி.

மன்: என் மகள்!

பர: மகாராஜா! சந்தேகப்படுகிறீர்களா? இவங்கதான் உங்கள் மகள்! எங்கள் இளவரசி.

மன்: என் மகள்!

வள்: ஏஞ்சாமி என்னைத் தெரியலியா? நான்தான் வள்ளி. இந்தச் சேனுதிபதி என் மச்சானை உதைச்சி என்னக் கொண்டுவந்திட்டான்.

பர: உண்மைதான் மகாராஜா. சேனுதிபதி பொய்யைக் காட்டி உங்கள் பார்வையைப் பழுதுபண்ணிவிட்டான்.

மன்: மகளே!

தேவ: அதோ உங்கள் அந்தஸ்தைக் காப்பாற்ற வந்த மகள். அருமை மகள். அவளையே சேனுதிபதிக்குக் கட்டிவைத்து மனம் குளிர வாழ்த்துங்கள்.

மன்: தேவசுந்தரி!

தேவ: அவளை அழித்துவிட்டீர்கள்! அவளைச் சாகடித்துவிட்டீர்கள்! அந்த உருவத்தில் இருப்பவள் அதோ! இனி அவள்தான் உங்கள் மகள்.

மன்: சேனாதிபதி... என்னை மோசம் செய்துவிட்டாய்! உன்னை உயிரோடு விட்டதே தப்பு.

[சேனாதிபதி மன்னனைக் கொல்ல முயல, சித்ரசேனன் சண்டையிட்டு சேனாதிபதியைக் கொல்கிறான்]

வள்: எசமான்! சேனாதிபதி செத்துட்டான்.

மன்: ஹீம் என்னையே கொல்ல நினைத்தான். நீதான் எனக்கு உயிர்ப் பிச்சை தந்தாய்.

தேவ: வாங்க போகலாம்.

மன்: தேவசுந்தரி! எங்கே போகிறாய்?

தேவ: ஒன்றுபட்ட காதலர்களைப் பிரித்துத் தூக்குமேடைக்கு அனுப்பாத நாட்டுக்கு நாங்கள் போகிறோம்.

மன்: ஐயோ நான் தவறு செய்துவிட்டேன். என்னை விட்டுப் போகாதீர்கள். என்னை மன்னித்துவிடுங்கள். சித்ரசேனா! என் மகளைத் திருமணம் செய்துகொள்.

சித்: எனக்குத் திருமணம்? என் தாய் இறந்த இரத்த வாடை இன்னும் மாறவில்லை. அதற்குள் எனக்குத் திருமணம். அரசே! ஆயிரம் ஆயிரம் இளவரசிகளைக் கொடுக்க முடியும். ஆயிரம் ஆயிரம் நாடுகளை ஒரே நேரத்திலே அதிகாரத்துக்குக் கொண்டுவர முடியும். ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தவம் இருந்தாலும் இறந்த என் தாயை—கருணையின் திருஉருவத்தை எனக்குத் திருப்பிக் கொடுக்க முடியுமா?

மன்: (மெய்க்காப்பாளனிடம்) நான் செய்த தவறுக்காக என் மகளைத் தண்டிக்க வேண்டாம். தாய் இழந்த என் மகளை உங்கள் கையில் ஒப்படைக்கிறேன்.

மெய்: சித்ரசேனா! மன்னர் மகள் என்பதற்காக உன் தாய் இவளை விரும்பவில்லை. இவள் பெரும் குணவதி என்பதற்காகவே விரும்பினாள். உன் தாயின் ஆத்மா சாந்தியடைய இவளை மணந்து கொள்.

[திருமணம்]

[சித்ரசேனனுக்கும் தேவசுந்தரிக்கும்]

**வணக்கம்!**

# வணங்காமுடி பாடல்கள்

---

பாட்டு 1 கோரஸ்

ராஜயோகமே பாரீர்—அனு
ராகயோகம் பெற வாரீர்
வாழ்வினிலே ஒரு நாள்
அதே திருநாள்—அன்பே அதனுல்
இன்பம் தரும் நாள் (ராஜ)
தேன் பாயும் சோலை-இளந் தென்றல் வேளை
மான் பாய்வதாலே மயங்கும் தன்னுலே
மனம்போல ஆடிப்பாடி
மகிழ்வோம் இந்நாளே (வாழ்)
விண் மேவும் தாரா-விளையாட வாராய்
பண் பாடி ஜோராய் படகோட்ட வாராய்
வளர்மதியாலே-வண்ணக்கலை மேவும் பாராய் (வாழ்)
மலையே உன் நிலையே நீ பாராய்
கலைஞன் கை உளியாலே
காவியச் சிலையான (மலை)
அலை போன்ற மனமீதில்
அமைதியும் நீதானே
பல நாளும் உனைச் செய்த
பலனே அடைவேனே
ஆலயம் உனக்காக
ஆண்டவன் எனக்காக
ஆனந்தம் காண்பேன் எந்தன் வாழ்விலே (மலை)

தொகையரு

கண்ணிலே பவனிவரும் கலைமணியே-என்
கனவும் நினைவாகவே
கற்பனை இதயத்தில்
புதையலானுய்-என் கவலை தீரவே

பல்லவி

தொழிலாளி உழைப்பாலே
தோன்றிடும் - சிலையே
உலகோரும் - உனை நாடி

உள்ளம் மகிழ்வாரே
கலைஞனும் உனக்காக
காவியம் எனக்காக
விலைமதியாச் - செல்வம் நீயல்லவோ (மலை)

## பாட்டு 2

தொகையரு

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டிற்கு நல்ல பயன் தருமா - எண்ணிப்
பாராமல் போராடும் மாந்தரால்
பலன் ற்று மாறிவிடுமா

பல்லவி

ஓங்காரமாய் விளங்கும் நாதம் - அந்த
ரீங்காரமே இன்ப கீதம் (ஓங்)

அநுபல்லவி

ஆங்கார உள்ளமே அமைதியும் பெறுமே
நீங்காத துயர் மாறி நிம்மதி தருமே
நிகரேது புவிமீது - இதற்கு
நிகரேது புவிமீது
இயலும் இசையும் கலையும்
இகம்தில் மகிழ்வுற சுகந்தரும் (ஓங்)

சரணம்

இசை பாடும் சுவையாலே அசைந்தாடும் நாகம்
இடர் சூழும் அலை மேவும் ஒலி பாவும் ராகம்
ஆவினங்களும் மகிழும் இசையே
கூவிடும் குயில் தொனியில் இசையே
காவியமதில் புகழும் இசையே
ஜீவிதமதில் திகழும் இசையே
தாலேலோவென
தீதில்லா அமுத கீதமே தவழும்
போதையால் மதலை தூங்குமே
இணையிலாத கலையிதாகும்
எங்கும் புகழுறவே
கனிந்து நிறைந்து (ஓங்)

## பாட்டு 3

பல்லவி

என்னைப் போல் பெண்ணல்லவோ - நீ

உலக இருள் நீங்கும்
கண்ணல்லவோ - தேவி (என்னை)

அநுபல்லவி

பொன்னோடு பொருள் யாவும் இருந்தாலும் - நான்
மின்னாத சுடர் போல வாழ்ந்தேன் அம்மா
சொன்னாலும் புரியாத உலகத்திலே - குறையைச்
சொன்னாலும் புரியாத உலகத்திலே - இனி
என் வாழ்வில் உனையன்றி துணையேதம்மா - நீ (என்னை)

சரணம்

மலரோடு மணம் சேர விலை வேண்டுமா
மனதோடு மனம் சேர நிலை வேண்டுமா
மலைபோன்ற இடர்தீர கதியாரம்மா - ஜெகன்
மாதா உன் அருள் தந்து குறை தீரம்மா - நீ (என்னை)

## பாட்டு 4

தொகையறு

சிரமதில் திகழ்வது ஜீவகசிந்தாமணி
செவிதனில் மிளிர்வது குண்டலகேசி
திருவே நின் இடையணி மணிமேகலையாம்
கரமதில் மின்னுவது வளையாபதியாம்
கால்தனில் ஒலிப்பது சிலப்பதிகாரம்
கண்கண்ட ஐம்பெருங்காவியத் திலகமே

பல்லவி

வா-வா-வா-வளர்மதியே வா
கலைமதியே வா வரமருள வா... வா... வா!

அநுபல்லவி

வண்ணமேவும் இசை வாரிதி - என்
வாழ்வில் இன்பந் தரும் பாரதி
அன்னையே கலையின் சாரதி - மகிழ்ந்
துன்னையே பணிந்தேன்
என்னை யாண்டருள் (வா)

சரணம்

கம்பனோடு கவி காளமேகமும்
கனிந்த உள்ளம் நீயே
காவியம் புகழ்ந்திடும் ஜீவஜோதியே
கவலை தீரும் தாயே! (காவி)

காண காணத் திகட்டாத இன்ப நிலே
காணும் செல்வம் நீயே
ககனமே புகழும் ராணியே - உன்
கமலசேவையே
கனிந்து - நீயருள (வா)

## பாட்டு 5

கட்டழகு மாமா - பொட்டழகு பூமா
விட்டு விட்டு ஓடாதே
வெட்கங்கெட்ட டோமா

அநுபல்லவி

காத்தாடிபோலே சம்மா பறக்குறே
ஆத்தாடி ஏனய்யா இப்படி மொறக்கிறே
கண்டிச்சி நிக்காதே
பெண்ணக் கண்டு சொக்காதே (கட்)
மனசை வித்தவன் - மானத்தை வித்தவன்
மனுஷன் தானு சொல்லிடுங்க
மதியும் கெட்டவன் - விதியும் கெட்டவன்
வாழ்ந்திடுவானு சொல்லிடுங்க
மத்தாப்பு போலே மறையும் புரிஞ்சுக்கோ—உந்தன்
வித்தாரம் செல்லாது இங்கே தெரிஞ்சுக்கோ
வக்கரிச்சி நில்லாதே கொக்கரிச்சு துள்ளாதே (கட்ட)
தென்னமரத்துலே தேளு கடிச்சா
பனமரத்துக்கு வலிக்குமா
புன்ன மரத்திலே ஏறி இறங்கினு
புளியங்காயும் கிடைக்குமா
புரியாமே வெளிச்சம் போடும் பூச்சாண்டி—இங்கே
சரியான இளிச்சவாய வாச்சாண்டி
ஜல்லிக்கட்டு காளேயடி துள்ளிக்கிட்டு பாயுதடி (கட்ட)

## பாட்டு 6 சித்ரசேனன்—தேவசுந்தரி

மோஹனப் புன்னகை செய்திடும் நிலவே
மேகத்திலே நீ மறையாதே
பாகுடன் தேனுமே கலந்திடும் நேரம்
சாகஸமே நீ புரியாதே (மோஹன)
தியாகமும் யோகமும் சேர்ந்ததினுலே
தென்றலே நீயும் பிரியாதே
தேன் மலர் தூவும் நேரமிதே—என்

செல்வமே நீயும் மறையாதே
தேன் இதழ்மேலே சிந்திடும் மதுவை
தேடியே வாராய் இன்னுளே
மான் விழியாலே வீசிடும் கணையே
மாரனும் மறைந்தான் உன்னாலே
காவினில் யாருமே தேடியே வருவார்
கண்ணு நீயும் பாடாதே
காதலின் வேளையில் சோதனை புரிவார்
கண்ணே நீயும் ஆடாதே (மோஹன)

## பாட்டு 7

ஆட்சியின் திமிராலே
அகந்தையின் பெயராலே
சூழ்ச்சியும் வஞ்சமும் சேர்ந்ததடா!
வீழ்ச்சியினுல் உள்ளம் வேதனைப் புயலாலே
வீண் பழியே உன்னைச் சார்ந்ததடா!
ஆதரவில்லாமல் நீதியும் நில்லாமல்
அன்னையைப் பிரிந்தேங்கும் கோலமடா
காதலின் நிலையாலே பேதமைச் செயலாலே
கரை கடந்தே செல்லும் காலமடா (ஆட்சி)
கடமையை மறவாமல்
மகனென்றும் நினையாமல்
காவலாய் வருவதும் விந்தையடா
உடல் உயிர் மறைந்தாலும்
உன்னையே மறவாமல்
எண்ணி எண்ணி ஏங்கும் தந்தையடா (ஆட்சி)

## பாட்டு 8

கோரஸ்

ஹொஹ்ஹோ ஹொஹ்ஹோ ஹொஹ்கோ
ஓ.........
ஆ...ஆ...ஆ...ஆ......

பல்லவி

ஏ குமுர் தகும்மா
கொய்யாப்பழம் போல
அய்யாவும் வந்தாரே
ஒய்யாரம் பாரேன்
வீரதீர சூரனெங்கள் ராஜா--எங்க மகராஜா
வீரதீர சூரனெங்கள் ராஜா—எங்க மகராஜா (ஏ)

ஏய் தகடு தத்தா திகிடு தத்தா
சபாலகரி டிங்கிரி சித்தா
ஜீனத்தா-ஜினு ஜினுத்தா
கனத்தா கனகனத்தா
தங்கப்பழம் போல அவர் ஜொலிப்பாரு
வீரசிங்கம் போல--யாரையுமே எதிர்ப்பாரு
தைய்யத்தா திய்யத்தா
தைய்யத்தா திய்யத்தா-உய்
தங்கப்பழம் போல அவர் ஜொலிப்பாரு
வீர சிங்கம் போல--யாரையுமே எதிர்ப்பாரு
தந்தனத்தான் தாளம் போட்டு
தப்புத்தாரை மேளம் கொட்டி
ஆடிடுவோம் கொண்டாடிடுவோம்
பாடிடுவோம் பள்ளுப் பாடிடுவோம்
ஏய் தகடு தத்தா திகிடு தத்தா
சபாலகரி டிங்கிரி சித்தா
ஜீனத்தா-ஜினு ஜினுத்தா
கனத்தா கனகனத்தா
காட்டுக்குள்ளே கடவுள்
தேடித்தந்தாரு-நம்ம
கூட்டத்துக்கு ஏற்றபடி வந்தாரு
தைய்யத்தா திய்யத்தா
தைய்யத்தா திய்யத்தா--உய்
ஆம்பிளைங்க பொம்பிளைங்க
எல்லோரும் கும்பிடுங்க (ஆம்)
ஆடிடுவோம் கொண்டாடிடுவோம்
பாடிடுவோம் பள்ளுப்பாடிடுவோம்
ஏய் தகடு தத்தா திகிடு தத்தா
சபாலகரி டிங்கிரி சித்தா
ஜீனத்தா-ஜினு ஜினுத்தா
கனத்தா கனகனத்தா (உய்)

**பாட்டு 9** **சித்ரசேனன்—தேவசுந்தரி**

வாழ்வினிலே-வாழ்வினிலே இன்னாள் இனி வருமா
வஸந்தமுடன்-தென்றலுமே வாழ்ந்திடும் நாள் வருமா
வாழ்வினிலே-வாழ்வினிலே இன்னாள் இனி வருமா
வஸந்தமுடன்-தென்றலுமே வாழ்ந்திடும் நாள் வருமா

வானமுதே-உன் நினைவால் வாடுகின்றேன் பாராய்
தேனமுதே-உன் நினைவால் தேடி நின்றேன் வாராய்
மதுநிலை மாரு-புது மலர் மேலே மகிழ்ந்திடும் தேன் வண்டே
மனநிலை மாரு-மானஸதேவி மகிழ்ந்திடுவோம் இன்றே
மது நிலை மாரு-புது மலர் மேலே மகிழ்ந்திடுவோம் இன்றே
மன நிலை மாரு-மானஸதேவி மகிழ்ந்திடுவோம் இன்றே
வாழ்வினிலே-வாழ்வினிலே இன்னாள் இனி வருமா
வஸந்தமுடன்-தென்றலுமே வாழ்ந்திடும் நாள் வருமா
வாழ்வினிலே வாழ்வினிலே இன்னாள் இனி வருமா
வஸந்தமுடன்-தென்றலுமே வாழ்ந்திடும் நாள் வருமா


## பாட்டு 10

தொகையரு

ஈரைந்து மாதமே
இடை நோக-உடல் நோக
ஈன்றெடுத்த-என் அம்மா
ஏழேழு ஜென்மமே
எடுத்து நான் வந்தமே
என்னையே துண்டித்து
காணிக்கை வைத்தாலும்
என் பாபம் தீருமா
அம்மா......அம்மா..
முத்தம் கொடுத்த வாய் பற்றி எரியுதே
நித்தம் அணைத்த கரம் நீருக வேகுதே-உலகில் எனை
தத்தம் கொடுத்த உடல்
தணலால் தஹிக்குதே
சித்தம் துடித்திடுதே
செந்தீயும் சூழ்ந்திடுதே
அம்மா...அம்மா...அம்மா

சுபம்

# திருக்குறள் நூல்கள்




நம்முடைய நாட்டிலும் சரி, உலக முழுவதிலும் சரி, சாதி சமய இன வேறுபாடின்றி உரிமை கொண்டு பயனடையத் தக்க நூல் திருக்குறள். தமிழர்கள் எல்லோருமே திருக்குறளைப் படிக்க வேண்டும் என்ற ஆவலில் பல அளவுகளில் திருக்குறளை வெளியிட்டிருக்கிறோம். படித்து பயன் பெறுங்கள்.

## திருக்குறள் பரிமேலழகர் உரை

பரிமேலழகர் உரையுடன் அழகிய கிளேஸ் பதிப்பு. கலிக்கோ பைண்ட்.

விலை ரூ. 5—0—0

## திருக்குறள் விளக்கவுரை

வித்துவான் ஈக்காடு - சபாபதி முதலியார் அவர்களால் விளக்கமான முறையில் எழுதப்பட்டது. 350 பக்கங்கள். அட்டை பைண்ட்.

விலை ரூ. 3—8—0

## திருக்குறள் சிறப்புரை

ஒவ்வொரு குறளுக்கும் சிறப்பான முறையில் சுருக்கமாக உரை கொடுக்கப்பட்டிருக்கிறது. கைக்கு அடக்கமான பாக்கட் அளவு.

விலை ரூ. 1—4—0

## திருக்குறள்

மூலம் மட்டும் பாக்கட் அளவு.

விலை. 0—8—0

மூலம் மட்டும் மிகச் சிறிய அளவு. (1/64) விலை. 0—8—0


**ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1**




## பகதூர் பவனம்

தமிழ்த் துப்பறியும் கதை இலக்கியத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் சேரனும் ஒருவராகும். அவருடைய அரிய படைப்புக்களுள் மிகச் சிறந்தது என வாசகர்களால் பாராட்டப்பட்டதே இப் "பகதூர் பவனம்."

**விலை ரூ. 3—00**




## களஞ்சியம்

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் கட்டுரை களஞ்சியம் இதில் இலக்கியம், வரலாறு எவ்விதம் எழுதப்பட வேண்டுமென்று தெளிவாக விளக்கபட்டிருக்கிறது.

**விலை ரூ. 0—50**




## தமிழ்த்தாய்

பள்ளி மாணவர்கள் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற பல் சுவை நிறைந்த நாடக நூல். மாணவர் மன்றத்திலே மறுமலர்ச்சி யூட்டும் மிகச் சிறந்த கதை வசனம் கொண்ட இனிய நாடகம், வடவைகுரல் அவர்கள் எழுதியது.

**விலை ரூ. 0—75**

**ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1**




ஒதெல்லோ
ஷேக்ஸ்பியர்






வெறு முரசு



பூம்புகார்